
GOKULAM

கோகுலம்

மே 2005


ரூ.6/-



வண்ணம் தீட்டுங்கள்!



படத்தை நிறைவு செய்யுங்கள்!



கோகுலம்

(கல்கி நிறுவன வெளியீடு)

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் ஆசிரியர் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

முதன்மை உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22251522 / 22250623

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
வெளிநாடு
(விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்



மே 2005 ❖ மலர் : 23 ❖ இதழ் : 4

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
- பாரதியார்

அன்புள்ள உங்களுக்கு...

விடுமுறையில் இருப்பீர்கள். லீவு விட்டதும் இப்படி இருக்க வேண்டும்; அப்படி செய்ய வேண்டும் என்று ஏகப்பட்ட விஷயங்களை யோசித்து இருப்பீர்கள். ஆனால் அதில் ஒரு சிலவற்றையாவது செய்திருந்தால் பெரிய விஷயம்தான்!

விடுமுறையில் ஊருக்குச் செல்வது என்பது நல்ல அனுபவத்தைத் தரும். வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்து மாறுபட்ட இடம், சூழல், மனிதர்கள் என பல புதிய விஷயங்கள் நம்மை புத்துணர்வு அடையச் செய்யும். பெரிய சுற்றுலா செல்ல வேண்டிய அவசியமில்லை. அவரவர்க்கு ஏற்றாற்போல் நகரத்திலிருந்து கிராமத்துக்கும் கிராமத்திலிருந்து நகரத்துக்கும் கூட செல்லலாம். எந்த இடத்துக்குப் போகிறோம் என்பது முக்கியமல்ல; எப்படி அதைப் பயன்படுத்துகிறோம் என்பதே முக்கியம்.

ஊருக்குச் செல்ல இயலாதவர்கள் வீட்டில் இடம் இருந்தால் தோட்டம் போடலாம்; அம்மாவுக்கு வீட்டு வேலைகளில் உதவி செய்யலாம்; கதைப் புத்தகங்கள் படிக்கலாம்; கதை எழுதலாம்; நண்பர்களுடன் விளையாடலாம்; டிராமா போடலாம்; முடிந்தால் கோடை விடுமுறை வகுப்புகளுக்குப் போகலாம்; கை வேலை செய்யலாம்... இன்னும் பலவற்றை சுவாரசியமாக கற்றுக் கொண்டு விடுமுறையை அர்த்தமுள்ளதாக ஆக்கிக் கொள்வது உங்கள் கையில்தான் இருக்கிறது. விடுமுறையை சந்தோஷமாகவும் ஜாலியாகவும் அனுபவியுங்கள்!

விடுமுறை சந்தோஷம்!



நீங்கள் வெயிலில் அலையாமல் வீட்டிலிருந்தபடியே விளையாட ஜாலி கேம் கொடுத்திருக்கிறோம். புதிய தொடர் கதை ஆரம்பம், சிறுகதைப் போட்டியில் பங்கேறுங்கள், பரிசுகளை வெல்லுங்கள்.

அன்புடன்

தம்பிப்பயல்

எத்தனை குதிரைகள்?



இங்கு மொத்தம் எத்தனை குதிரைகள் உள்ளன? இதில் கறுப்பு குதிரைகள் எத்தனை, வெள்ளைக் குதிரைகள் எத்தனை?

விடை: குதிரைகள் 18, கறுப்பு 9, வெள்ளை 9

ஜொலிக்கும் நிலாவும் நட்சத்திர ஆமைகளும்!

காலை நேரம். காட்டு விலங்குகள் பரபரப்பாக உணவு தேடி அலைய ஆரம்பித்தன.

தனது புதர் வீட்டிலிருந்து வெளி வந்த சோமையன் ஆமை, மருத்துவர் நரியைத் தேடிச் சென்றது.

நரியின் க்ளினிக்கில் நிறைய கூட்டம். ஒரு மணி நேரத்துக்குப் பின் சோமையன் உள்ளே நுழைந்தது.

''மருத்துவரே, எனக்கு கொஞ்ச நாட்களாக எதைத் தின்றாலும் பசி அடங்கவேயில்லை. ஏதாவது மருந்து கொடுங்கள். எந்நேரமும் சாப்பிட்டுக் கொண்டிருக்க என்னால் முடியாது'' என்றது சோமையன்.

''இதுக்குப் பேர் யானைத் தீப்பசி. சோளத் தோசை சுட்டு சாப்பிட்டால் இந்நோய் தீரும்'' என்றது நரி.

சோள தோசை சுடுவதற்கு சோளம் வேண்டுமே! என்ன செய்யலாம் என்று யோசித்த சோமையனுக்கு கிளியின் நினைவு வந்தது. தன்னால் முடிந்தவரை வேகமாக நடந்து கிளியின் கூட்டை அடைந்தது.

சோமையனை வரவேற்று,





வந்த காரணத்தைக் கேட்டது கிளி.

"மருத்துவர் என் பசி நோய் நீங்க, சோளத் தோசை சாப்பிடச் சொல்லியிருக்கிறார். சோளம் பயிர் செய்ய, சோளமணிகளைத் தந்து எனக்கு உதவ வேண்டும்" என்றது சோமையன்.

"என் குழந்தைகளுக்காக நேற்று சோளம் பறித்து வந்தேன். இதை எடுத்துச் சென்று, உன் நோயைக் குணப்படுத்திக் கொள்" என்றது கிளி.

நன்றி கூறிவிட்டு சோளத்தை எடுத்துக் கொண்ட சோமையன் பன்றியைப் பார்க்கச் சென்றது.

விஷயம் முழுவதையும் கேட்ட பன்றி உடனே சோமையன் வீட்டுக்கருகில் தன் சிறிய கொம்பால் நிலத்தை உழுது கொடுத்தது.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த யானை, சோமையனுக்கு உதவுவதாகக் கூறி, தண்ணீரை நிலத்தில் பாய்ச்சியது.

சில நாட்களில் சோளப் பயிர் செழித்து வளர்ந்து கதிர் முற்றியது. அறுவடைக்கு குருவிகளின் உதவியை நாடியது சோமையன்.

குருவிகளும் கொத்திக் கொத்தி சோளமணிகளை அறுவடை செய்தன.

கொ.மா.கோதண்டம்

அங்கு வந்த குரங்கு ''சோமையா, எனக்கு இரண்டு சோள தோசை தருவதாகச் சொன்னால், இதை மாவாக இடித்துத் தருகிறேன்'' என்றது. சோமையனும் மகிழ்ச்சியுடன் சம்மதித்தது.

சோமையன் தன் குடும்பத்துடன் சென்று விறகு சேகரித்து வந்தது. ஒரு சமதளமான பெரிய கல்லுக்கடியில் தீ மூட்டியது. கல் சூடானதும் கரைத்து வைத்த மாவை வட்ட வட்டமாக ஊற்றி தோசை சுட்டு எடுத்தது.

நரி, கிளி, பன்றி, யானை, குருவிகள், குரங்கு என தனக்கு உதவிய அத்தனை பேருக்கும் இரண்டு, இரண்டு தோசைகளைக் கொடுத்தது. பிறகு தன் குடும்பத்தாருடன் அமர்ந்து சாப்பிட்டது சோமையன். உடனே சோளத் தோசை சாப்பிட்ட அனைவருக்கும் பசி நோய்த் தீர்ந்தது. மீதி ஒரு தோசை இருந்தது. அதைப் பாறைமேல் வைத்து விட்டு சோமையன் படுக்கச் சென்றது.

அந்தக் காலத்தில் நிலா கிடையாது. நட்சத்திரங்களின் மிகக் குறைந்த ஒளியில் இரவு நேர உயிரினங்கள் உணவு தேட மிகவும் சிரமப்பட்டன. இரவிலும் வெளிச்சம் வர வேண்டும் என்று எல்லா விலங்குகளும் தவமிருந்தன. உடனே வனதேவதை அவர்கள் முன் தோன்றியது.

வனதேவதை பாறை மேல் இருந்த தோசையைப் பார்க்கவும் அது தகதகவென ஜொலித்து விண்நோக்கிச் சென்றது. நிலாவாக மாறியது.

விலங்குகள் மகிழ்ந்தன. யானை ''இந்தச் சோள தோசை சுட்ட ஆமை சோமையனுக்கும் ஏதாவது சிறப்புச் செய்ய வேண்டும். அவனால் தான் நிலா எங்களுக்குக் கிடைத்தது'' என்று வேண்டுகோள் விடுத்தது.

உடனே வனதேவதை வானத்திலிருந்த சில நட்சத்திரங்களைப் பறித்து ஆமைகளின் ஓட்டின் மேல் வைத்தது.

எல்லா விலங்குகளும் மகிழ்ச்சியுடன் நன்றி கோஷமிட்டன. தேவதை மறைந்தது. நட்சத்திர ஆமைகளும் விலங்குகளும் விடிய விடிய ஆடிப் பாடி மகிழ்ந்தன.

ஓவியப் போட்டி

தானியங்களைக் கொத்தித் தின்னும் குருவிகளைப் பார்த்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: **குருவிகள்.** உங்கள் கற்பனைக்கு ஏற்றவாறு வண்ணத்தில் குருவிகளை வரைந்து அனுப்புங்கள்.



சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி: **6.05.2005**

கோடை விடுமுறை போட்டி - 1

இங்கு காந்தி, சாப்ளின், ஸ்டாலின், பில்கேட்ஸ், ஜார்ஜ் புஷ், ஐன்ஸ்டீன் போன்ற புகழ்பெற்றவர்களின் இளமைக்காலப் புகைப் படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன; அவற்றில் எண்களும் குறிப்பிடப் பட்டுள்ளன. யார், எந்த எண்ணுக்கு உரியவர் என்பதை எழுதி அனுப்புவது தான் போட்டி. சரியான விடைகளை எழுதி, உங்கள் முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட்டு, முகவரி கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். சரியான விடை அளித்தவர்களில் 10 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி: 20.05.2005



இளமைப் படங்களில் யார்?



ஆசிரியர்,
கோகுலம்
47-NP, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032




ஹாய் ஃப்ரெண்ட்ஸ்,

எல்லோருக்கும் சுற்றுலா அனுபவம் இருக்கும். நாங்கள் விடுமுறையில் சிங்கப்பூர் போயிருந்தோம்.

முதல் விமானப் பயணம், முதல் வெளிநாட்டுப் பயணம் என்பதால் எனக்கு அதிக எதிர்பார்ப்பும் ஆர்வமும் இருந்தது.

சென்னையிலிருந்து நள்ளிரவில் விமானம் கிளம்பியது. சிறிது நேரம் விமானத்தை அதிசயமாகப் பார்த்துவிட்டு, நானும் என் அக்காவும் தூங்கிவிட்டோம். திடீரென அம்மா எழுப்பி, ''சிங்கப்பூர் வந்தாச்சு'' என்றார். நன்றாக விடிந்திருந்தது. ''இரவு முழுவதும் பயணம் செய்தோமோ?'' என்று நான் கேட்க, ''மூன்றரை மணி நேரப் பயணம்தான். சிங்கப்பூருக்கும் நமக்கும் நேர வித்தியாசம் உள்ளதே'' என்றார் அப்பா.

மிகப் பெரிய விமான நிலையம் எங்களை வரவேற்றது. உயர்ந்து ஓங்கிய கட்டடங்கள், தெருக்களின் சுத்தம் என ஒவ்வொன்றையும் பிரமிப்புடன் பார்த்தபடி ஹோட்டலுக்குச் சென்றோம். அங்கு மேலே போக, கீழே வர எஸ்கலேட்டர்கள் இருந்தன. அதில் போயிட்டு வர்றதே எனக்கு ரொம்ப ஜாலியாக இருந்தது.




முதலில் சென்டோசா தீவுக்குக் கிளம்பினோம். அங்குதான் ஆழ்கடல்

















ஜாய்ஃபுல் சிங்கப்பூர்!

உலகம், லேசர் ஷோ, நீரூற்றுக் காட்சி, வண்ணத்துப் பூச்சி கிங்டம், மெரிலயன், வல்கனோ லேண்ட் போன்றவை உள்ளன.

கேபிள் கார் மூலம் சென்டோசா தீவை அடைந்தோம். கேபிள் காரில் வரும் போது சிங்கப்பூர் நகர் கண்கவர் அழகுடன் காட்சியளித்தது.

நாங்கள் கடல் வாழ் (under water world) உயிரினங்களைப் பார்க்கச் சென்றோம். கண்ணாடியால் செய்யப்பட்ட சுரங்கப் பாதைக்குள் சென்றால் மேலே சிறிய வண்ண மீன்கள், பெரிய மீன்கள், நட்சத்திர மீன்கள், சுறா போன்ற கடல் வாழ் உயிரினங்கள் (250 வகை - 600 உயிரினங்கள்) அத்தனையையும் பார்க்க முடிந்தது. கண்ணாடி உடைந்தால் என்ன



ஆகும் என்பதை யோசிக்கும் போது கொஞ்சம் பயம் வந்து அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டேன். கடலுக்குள் சென்று பார்த்த அனுபவம் இதில் கிடைத்தது.

சிங்கத்தலை, மீன் உடல் போன்ற அமைப்பையுடையது மெரிலயன். இது மிகவும் பிரம்மாண்டமான சிலை. இதன் வாயிலிருந்து தண்ணீர் பீய்ச்சியடிக்கிறது. இரவு நேரத்தில் வண்ண விளக்குகளில் இந்த இடம் ஜொலிக்கிறது.

மீயூசிக்கல் ஃபவுண்டெய்ன் எனப்படும் நீரூற்று ஷோவில் இசைக்கு ஏற்றாற் போல் நீரூற்று நடனமாடி நம்மை மகிழ்விக்கிறது.

லேசர் ஷோவில் கொடிகள், தலைவர்கள் மற்றும் பல உருவங்களை லேசரால் காட்டுகின்றனர்.

சென்டோசா நகரை விட்டு மீண்டும் தங்கியிருந்த ஹோட்டலுக்கு வந்தோம். மறுநாள் காலை ஸ்நோவேர்ல்டுக்குப் போனோம். குளிருக்காக ஜர்கின் போட்டுக் கொண்டாலும் ஆர்டிக் பகுதிக்குப் போய்விட்டோமோ என்று நினைக்கும் அளவுக்கு குளிர் வாட்டியது.

ஐ மேக்ஸ் தியேட்டரில் ஒரு அட்வென்ச்சர் படம் பார்த்தோம்.

அன்று இரவு நைட் சஃபாரிக்குச் சென்றோம். அங்கு காட்டுச் சூழ்நிலையில் விலங்குகள் வளர்க்கப்படுகின்றன. இரண்டு பக்கமும் கண்ணாடியால் மூடப்பட்ட ட்ராம் வண்டியில் ஏறினோம். அமைதியாக வண்டி புறப்பட்டது. விலங்குகளின் உறுமல்களைக் கேட்டபோது எனக்கு மட்டுமின்றி பெரியவர்களுக்கும் பயம் வந்தது. இருட்டில் டார்ச் விளக்குகள் போல் பெரிய விலங்குகளின் கண்கள் ஒளிர்ந்தன. திகிலைத் தந்தாலும் அற்புதமான அனுபவம்!

கடைசி நாள் ஜூராங் பார்க் சென்றோம். அங்கு ஹார்ன் பில், பல வண்ணக் கிளிகள், ஃபிளமிங்கோ போன்ற பறவைகள் இருந்தன. கிளிகள் சைக்கிள் ஓட்டின. ஒரு கிளியை என் கையில் வைத்தார் பயிற்சியாளர். கிளி சிறிதும் பயமின்றி அமர்ந்திருந்தது.

முஸ்தஃபா ஷாப்பிங் மால், லிட்டில் இந்தியா போன்ற பகுதிகளுக்குச் சென்று என் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கிஃப்ட் வாங்கினோம். மீண்டும் விமானம் ஏறி சென்னை வந்தோம்.

சிங்கப்பூரில் நான்கு நாட்கள் ரொம்ப ஜாலியாகவும் இருந்தது; புதிய அனுபவத்தையும் தந்தது!

அன்புடன்,
ஷில்பா

அட்டையில் : **ஷில்பா**
அட்டைப் படம் : **ஸ்ரீஹரி**
வண்ணப்படங்கள் : **ஸ்வேதா**

யார் அந்தப் பிரபலம்?



இவர் ஒரு பிரபல எழுத்தாளர்.

ஜோக்ஸ் கார்னர்



ஒரு வாரமா உட்கார்ந்தால் எழ முடியலை.
ஒரு வாரமா என்ன பண்ணிட்டிருந்தீங்க?
ஒரு வாரமா உட்கார்ந்து இருந்தேன் டாக்டர்!
- ச.எழில்,



- எம்.ஜ. லியாகத் அலி, திருச்சி



இளவரசருக்கு யானை ஏற்றம், குதிரை ஏற்றம் இவற்றுடன் 'விலை ஏற்றம்' பற்றியும் கற்றுத்தர ஏற்பாடு செய்யுங்கள் அமைச்சரே!
- ஜி. விஷ்ணுகிரி, கோவை



என்னப்பா உடம்புக்கு?
அது பர்ஸனல் டாக்டர்.
- டி. சந்தியா, ஆரணி
பரவாயில்லை, எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள்.
அது எப்படி டாக்டர், பர்ஸனல் விஷயம் உங்ககிட்ட சொன்னா பப்ளிக் ஆகிடுமே!

கிருஷ்ணர் வருவது ஏன்?

கதை: பி.காயத்ரி,
ஏழாம் வகுப்பு, செயின்ட் ஜான் மெட்ரிக் பள்ளி, சென்னை
படம்: பிள்ளை






பணியாள் சிலைக்கு ஆடைகளை அணிவித்தார்.
ஐயா, இந்தச் சிலை தயார்.
ரொம்ப நன்றாக இருக்கிறது!
அதோ அரசர் வருகிறார். நீ குளத்துக்குள் சிலையை வீசு.
பணியாள் சிலையை வீசினார்.
ஐயோ!
உடனே அக்பர் குளத்தில் குதித்தார்.
என் பேரனைக் காப்பாற்றி விட்டேன்.
அரசே, இது வெறும் சிலை தான்!
உங்களுக்கு உதவியாளர்கள் இருக்கும் போது ஏன் நீங்களே குதித்தீர்கள்?
பேரன் என்றால் எனக்கு உயிர்... அதனால் தான்.
கிருஷ்ண ருக்கும் பக்தர்கள் மேல் உயிர். அதனால் தான் அவரே வருகிறார்.


Vedha

கயல் விழியும் எழிலரசியும் மாம்பழங்களை விற்பதற்காகச் சந்தைக்குச் சென்றார்கள். ''ஒரு ரூபாய்க்கு ஐந்து பழங்கள் விற்க வேண்டும் என்று 50 பழங்களை என் அப்பா கொடுத்து உள்ளார்'' என்றாள் கயல்விழி.

''நான் 4 பழங்களை ஒரு ரூபாய்க்கு விற்க வேண்டும். 40 யினால் எளிய வழியைக் கண்டு பிடித்த மகிழ்ச்சியில் இருவரும் வீடு திரும்பினார்கள். மறுநாள் கயல்விழி 30 பழங்களுடனும் எழிலரசி 60 பழங்களுடனும் சந்தைக்குப் புறப்பட்டார்கள்.

''நான் 6 ரூபாய்க்கு விற்பதற்குப் பழம் கொண்டு வந்துள்ளேன். நீ 15 ரூபாய்க்குப் பழம் கொண்டு



ஒரு ரூபாய் எங்கே?

பழங்கள் கொண்டு வந்திருக்கிறேன்'' என்றாள் எழிலரசி.

அதற்குக் கயல்விழி, ''ஏன் இருவரும் தனித்தனியாகப் பழம் விற்க வேண்டும்? இரண்டு ரூபாய்க்கு ஒன்பது பழம் வீதம் விற்போம். இருவரும் ஒரே சமயத்தில் வீடு திரும்பலாம்'' என்றாள்.

எழிலரசியும் ஒப்புக் கொண்டாள். இருவரும் அதன்படியே ஒன்பது பழம் இரண்டு ரூபாய் என்று விற்றார்கள். மொத்தம் 20 ரூபாய் கிடைத்தது. ஆளுக்குப் பத்து ரூபாய் எடுத்துக் கொண்டார்கள்.

தங்கள் அறிவுக் கூர்மை

வந்துள்ளாய். நேற்று விற்றது போல ஒன்பது பழம் இரண்டு ரூபாய் என்று விற்போம்'' என்றாள் கயல்விழி.

இருவரும் பழங்கள் எல்லாவற்றையும் விற்று முடித்தனர். விற்ற பணத்தை எண்ணிப் பார்த்தார்கள். இருபத்தோரு ரூபாய்க்குப் பதில் இருபது ரூபாய்தான் இருந்தது.

அவர்கள் யாரிடமும் ஏமாறவும் இல்லை; பணத்தைத் தொலைக்கவும் இல்லை. எப்படி ஒரு ரூபாய் குறைகிறது என்று அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. உங்களால் முடிகிறதா?

- ம. சந்தோஷ்,
நான்காம் வகுப்பு, அரிமா
மெட்ரிக் மே. நி.பள்ளி,சிவகாசி

விடை-91ம் பக்கம்



உயிர்களிடம் அன்பு செலுத்துவோம்...

ரிஷியின் வீட்டுக்கு ஸ்நேகா வரும்போது இருவர் அரிவாள், கடப்பாறையுடன் நின்று கொண்டிருந்தனர். ஸ்நேகா காரணம் கேட்டாள்.

''எங்கள் தோட்டத்தில் நிறைய மரம், செடி, புதர் இருக்கிறது. இதையெல்லாம் வெட்டி விட்டு புதிய அழகான செடிகளை வைக்கப் போகிறோம். மீதி இடத்தில் பிளாட்ஃபார்ம் போடப் போறோம்'' என்றான் ரிஷி.

''ரிஷி, உங்க வீட்டு மரங்களில் புறா, மைனா எல்லாம் கூடு கட்டி வாழ்ந்துட்டு இருக்கு. மண்ணில் ஆயிரக்கணக்கான புழு, பூச்சிகள் வசித்து வருகின்றன. அந்த உயிர்களுக்கு தங்கறதுக்கு இடமில்லாமல் போகும்'' என்றாள் ஸ்நேகா.

''அதுக்காக பாம்பு போன்ற பிராணிகளுக்கு பயந்துட்டு வாழ முடியுமா? இந்தத் தோட்டத்தைப் பராமரிக்கிறது ரொம்பக் கஷ்டம் தெரியுமா ஸ்நேகா?''

''உங்களோட கஷ்டம் புரியுது ரிஷி. தோட்டத்தில் ஃபிளாட்ஃபார்ம் போடறதாலே நிலத்துக்குள் நீர் செல்ல முடியாமல் போகும். நான் சொல்லும் யோசனையைக் கேட்பீயா?''

''நீ எங்கப்பாகிட்டேயே பேசு ஸ்நேகா'' என்றான் ரிஷி.

''சொல்ல வந்ததை சொல் ஸ்நேகா'' என்றார் ரிஷியின் அப்பா.

''அங்கிள், மரத்தை வெட்டாதீங்க. புதர்ச் செடிகளைச் சுத்தம் செய்து விட்டு உங்களுக்கு விருப்பமான செடிகளை வைங்க. தோட்டம் அழகாகவும் இருக்கும்; சுத்தமாகவும் இருக்கும். உங்க தோட்டத்தை நம்பியிருக்கிற உயிர்களுக்கும் பாதுகாப்பு'' என்றாள் ஸ்நேகா.

''உன் யோசனைக்கு ரொம்ப நன்றி. அப்படியே செய்யறேன்'' என்றார் ரிஷியின் அப்பா.

ஸ்நேகாவுக்கும் ரிஷிக்கும் நிம்மதியாக இருந்தது.

கைகளை மட்டும் பயன்படுத்தி வரைந்த படங்கள் இவை.

தொகுப்பு: எம்.ஷாஜஹான், திருநெல்வேலி





கற்பனையும் கைத்திறனும்!









ஒரு வார்த்தைக்கு ஒரு டாலர்!

நல்ல நாள்!

பேரறிஞர் அண்ணாவுக்கு அறுவை சிகிச்சையொன்று செய்வதென மருத்துவர்கள் முடிவு செய்தனர். அமெரிக்காவிலிருந்து வந்திருந்த புகழ்பெற்ற டாக்டர் மில்லர் அண்ணாவிடம், ''ஆபரேஷனை நாளை வைத்துக் கொள்ளலாமா?'' என்று கேட்டார். அதற்கு அண்ணா, ''நாளை மறுநாள் வைத்துக் கொள்ளுங்களேன்'' என்று வேண்டுகோள் விடுத்தார். ''ஏன்? நாளை நல்ல நாள் இல்லையா?'' என்று கேட்டார் மில்லர். நான் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறேன். அதை நாளை முடித்து விடுவேன். அதன் பிறகு நான் இறந்து போனாலும் கவலை இல்லை. அதற்காகத்தான் தள்ளி



வைக்கச் சொல்கிறேன்'' என்றார் அண்ணா!

- எம். வினோத்
சங்கரன்கோவில்

சேவையில் மிஞ்சியவர்!

ஓர் ஏழைத் தாய்க்கு



அண்ணா

அன்னை தெரசா மூன்று ரொட்டித் துண்டுகளை வழங்கினார். பசித்தவனுக்கு முன்னால் உணவு கொடுக்கப்பட்டால் அதை உடனே உண்ணவே ஆசைப்படுவான். ஆனால் இந்த ரொட்டித் துண்டுகளைப் பெற்ற தாயோ வேகமாக அந்த இடத்தை விட்டு ஓட ஆரம்பித்தார். உடனே ஓட விடாமல் தடுத்த தெரசா ''சாப்பிடாமல் எங்கே போகிறாய்?'' என்று கேட்டார்.

''அம்மா! நானாவது

பரவாயில்லை இரண்டு நாட்களாகத்தான் பட்டினி; என் பக்கத்து வீட்டிலுள்ளவள் தன்



* லிங்கன்

மக்களோடு சேர்ந்து மூன்று நாட்களாகப் பட்டினியாகக் கிடக்கிறாள். எனவே அவர்களுக்குப் போய் இதைக் கொடுக்கப் போகிறேன்'' என்றார்.

அதிர்ச்சியிலிருந்து மீண்ட தெரசா, ''அம்மா! சேவையில் நீ என்னையும் மிஞ்சி விட்டாயே!'' என்று கண்ணீர் மல்க கூறினார்.

- ஆர்.அம்பிகா,
மதுரை

நேரம் இருந்தால்...

லிங்கனிடம் ஒருவர் ''ஏன் உங்கள் வாழ்க்கை வரலாற்றைப் பதினெட்டே பக்கங்களில் முடித்து விட்டீர்கள்..?'' என்று கேட்டார். ''நேரம் இருந்தால் இன்னும் குறைத்து எழுதியிருப்பேன்...!'' என்றார் லிங்கன்.

- பாலு,
சென்னை

பலே ரசிகர்!

பிரபல அமெரிக்க எழுத்தாளர் ருட்யார்டு கிப்ளிங்கிற்கு அவர் எழுதும் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு டாலர் கொடுக்கப்பட்டது. இதைக் கேள்விப்பட்ட அவருடைய ரசிகர் ஒருவர் கிப்ளிங்கிற்கு ஒரு டாலர் அனுப்பி வைத்து அவர் கைப்பட ஒரு வார்த்தை எழுதி அனுப்பும்படி வேண்டினார். கிப்ளிங்கும் அந்த ஒரு டாலரைப் பெற்றுக் கொண்டு 'தாங்க்ஸ்' என்ற ஒரே சொல்லை



* தெரசா

எழுதி அனுப்பினார்.

ஒரு வாரம் கழித்து வந்த தபாலில் ''நீங்கள் எழுதியனுப்பிய ஒரு வார்த்தையை நான் 2 டாலர்களுக்கு விற்று விட்டேன். எனக்கு கிடைத்த லாபமான ஒரு டாலரில் உங்களுடைய பங்கான 50 சென்ட்டை இத்துடன் அனுப்பியுள்ளேன்'' என்று எழுதி இருந்தார் அந்த ரசிகர்

- விசாகன்,
இராஜபாளையம்

1 மர்மப் புத்தகம்!



"அப்பா, மதுரை மீனாட்சியம்மன் கோயில் உலக அதிசயங்களில் ஒன்றாக ஆகப் போகிறது" ராஜு உற்சாகத்துடன் சொன்னான்.

"இப்பொழுது இருபத்தாறாம் இடத்தில் உள்ளது. பார்க்கலாம்" என்றார் அப்பா சங்கரன்.

"இந்த வருடம் மதுரைக்குப் போகலாம்பா" என்றாள் ராதிகா.

"வேறு எங்காவது போகலாம்பா. மதுரை 'போர்' அடிக்கும்"- ராஜு.

"இதோ பார் ராஜு, நீ ஆறாம் வகுப்பு படிக்கறே. வேலைக்காக நாம் கோவையில் இருந்தாலும் மதுரை நம் சொந்த ஊர். நாம் பிறந்து, வளர்ந்த ஊரைக் கேவலமாகப் பேசக் கூடாது"என்று அம்மா விமலா கூறினார்.

"அம்மா, மதுரையைப் பற்றி சொல்லுங்களேன். 'மதுரை - சங்கத்தமிழ் வளர்த்த ஊர்' என்கிற தலைப்பில் ஒரு கட்டுரை போட்டி உள்ளது" என்று ராதிகா ஆவலுடன் கேட்டாள்.

"மதுரை கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கும் பழைய ஊர் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். சிவ பெருமானுடைய ஜடாமுடியிலிருந்து ஒரு சொட்டு அம்ருதம் விழுந்ததால், இந்தப் பூமிக்கு மதுரம் என்ற பெயர் வந்தது என்று கூறுவர். மீனாட்சியம்மனாக பார்வதி தேவி இங்கு பிறந்து, வளர்ந்து, ஆட்சி செய்த ஊர் இது" விமலா பெருமையுடன் கூறினார்.

"அதுமட்டுமல்ல, மதுரை சங்கத்தமிழ் வளர்த்த ஊர். சங்கக் காலத்தில் யாராவது நூல் இயற்றினால் அதைக் கோவிலில் உள்ள

பொற்றாமரைக் குளத்தில் போடுவார்களாம். அது தரமான இலக்கியம் என்றால் மேலே மிதந்து வருமாம்!''

''பதினான்காம் நூற்றாண்டு வரை பாண்டிய மன்னர்களால் ஆளப்பட்டு பெரும் பேரையும் புகழையும் பெற்ற ஊர் மதுரை. திருமலை நாயக்கர் அவர்களால் கி.பி. 1623 - 1660க்குள் இந்தக்



கோயிலும் மதுரை மாநகரமும் கட்டப்பட்டன. இங்கு சித்திரை மாதம் நடக்கும் சித்திரைத் திருவிழா உலகப் பிரசித்தி பெற்றது'' என்றான் தன் பங்குக்கு ராஜு.

''உனக்கெப்படி தெரியும்?'' என்று ராதிகா ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''ராஜுதான் ஒரு புத்தகப் புழு ஆச்சே! புத்தகத்தில் படித்திருப்பான்'' என்றார் அப்பா.

''அப்பா, லீவுக்கு எங்கே போறோம்னு அப்புறம் பார்க்கலாம். இப்ப சென்னையில் பெரிய புத்தகக் கண்காட்சி நடக்கிறது. போகலாம்பா...'' - ராதிகா கேட்

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி

டாள்.

''ஹையா, ரொம்ப ஜாலிதான். எனக்கு நிறையப் புத்தகங்கள் வாங்கணும். அதுவும் எகிப்து நாட்டைப் பற்றிய புத்தகங்கள் கண்டிப்பாக வாங்க வேண்டும்'' என்று ராஜு மகிழ்ச்சியுடன் கூறினான்.

''நீ ஒரு புத்தகப் பைத்தியம் மட்டுமல்ல எகிப்து பைத்தியமும் கூட'' - ராதிகா சீண்டினாள்.

''வீட்டில் நிறையப் புத்தகங்கள் இருக்குது. போதாதா?'' விமலா கேட்டார்.

''என்ன இது விமலா, குழந்தைகளுக்குப் புத்தகங்கள் தான் பெரிய சொத்து. எத்தனை வாங்கினாலும் தவறு இல்லை. சரி, இந்த வெள்ளிக்கிழமை கிளம்பி சென்னைக்குப் போயிட்டு ஞாயிற்றுக் கிழமை கோவைக்குத் திரும்பி விடுவோம்'' என்று சங்கரன் உறுதியளித்தார்.

அனைவரும் சென்னை வந்தடைந்தனர். அத்தை ஜானகியும் அவர் மகள் அகிலாவும் இவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அன்று மதியம் ராஜு, ராதிகா, அகிலா மூவரும் புத்தகக் கண்காட்சிக்கு சென்றனர்.

''எத்தனை புத்தகக் கடைகள், எவ்வளவு புத்தகங்கள்! எதை வாங்குவது, எதை விடுவது என்றே தெரியவில்லை'' - ராஜு.

''திரு. புத்தகப்புழு அவர்களே, எத்தனை புத்தகங்களை வேண்டுமானாலும் நீங்கள் வாங்கலாம்'' ராதிகா கேலி செய்தாள்.

கை நிறையப் புத்தகங்களோடு, மூவரும் பணம் கட்டுமிடத்திற்கு வந்தனர். அப்பொழுது ஒரு பெரியவர் அவசரமாக ராஜுவின் அருகில் வந்தார். ''தம்பி, நான் எடுத்திருக்கும் ஒரு புத்தகம் உன் கையில் இருக்கிறது. அதைக் கொடுத்து விடு'' என்றார்.

''எந்தப் புத்தகம்?'' என்றபடி புத்தகங்களை ஒரு மேஜைமேல் வைத்தான் ராஜு.

''எகிப்து நாட்டின் மர்மங்கள் எனும் புத்தகம் என்னுடையது'' என்றார் அந்தப் பெரியவர்.

''இல்லை சார், அது என் புத்தகம்'' என்றான் ராஜு.

''வயதில் பெரியவன் நான். நீ மறுப்பது சரியல்ல. அது என் புத்தகம்'' என்றபடி புத்தகங்களை எடுக்கத் துவங்கினார்.

''என் புத்தகங்களைத் தொடாதீர்கள்'' என்று ராஜு சத்தமாகக் கூறினான்.

சத்தம் கேட்டு கடைக்காரர் ஓடி வந்தார். ''என்ன விஷயம்?'' என்று அவர் கேட்டார். ''என் புத்தகத்தை இந்தப் பையன் திருடிவிட்டான்'' என்றார் பெரியவர்.

உடனே அகிலாவும் ராதி

யார் அந்தப் பிரபலம்?



இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்றவர்.

காவும், ''இல்லை, இது ராஜுவின் புத்தகம். அவன் திருடவில்லை. இந்தப் பெரியவர் பொய் சொல்றார்'' என்றனர்.

கடைக்காரர், ''சார், உங்களுக்கு நான் வேறு பிரதி தருகிறேன், வாருங்கள்'' என்றார்.

''எனக்கு இந்தப் பிரதி தான் வேண்டும். சிவப்பு மையினால் ஒரு குறியீடு உள்ளது பாருங்கள்'' என்றார்.

உடனே கடைக்காரர், ''நீங்கள் காசு தராமல் சிவப்பு மையினால் குறியீடு செய்தது தவறல்லவா. தம்பி, உனக்குத்தான் இந்தப் புத்தகம். இந்தக் குறியீடை அழித்து விடுகிறேன்' என்றார்.

''வேண்டாம், இந்தக் குறியீடு இருக்கட்டும். அப்பொழுதுதான் அது என் புத்தகம் என்று எல்லோருக்கும் தெரியும்'' என்றான் ராஜு. மூவரும் புத்தகங்களுடன் வெளி யில் வந்தனர்.

''நீ என்ன புத்தகங்களை வாங்கினாய்?'' ராஜு கேட்டான்.

அகிலா, '''பஞ்சதந்திர கதைகள்', 'அறிவூட்டும் கதைகள்', 'சிறுவர்களுக்கான சாலை விதிப் பாடல்கள்' போன்ற புத்தகங்களை வாங்கினேன்'' என்றாள்.

ராதிகா மெதுவாக, ''தயவு செய்து திரும்பிப் பார்க்காதீங்க, அந்தப் பெரியவர், நம்மைத் தொடர்கிறார். நமக்கு ஆபத்துன்னு தோணுது'' என்றாள். மூவரும் வேகமாக நடந்து, வீட்டை அடைந்தனர்.



''நான் சேட்டை செய்தால், என் அப்பாவுக்கு மூக்கு மேல் கோபம் வரும்...''

''என் அப்பாவுக்கு என் மீதுதான் கோபம் வரும்!''

- எஸ்.மோகன்

எல்லாவற்றையும் கேட்ட விமலா, ''ஏன் ராஜு, அந்தப் பெரியவருக்கே நீ புத்தகத்தைத் தந்திருக்கலாமே'' என்றார்.


''வயதில் பெரியவர் இப்படி பொய் சொல்லலாமா? அவருக்கு நான் புத்தகத்தைத் தரமாட்டேன்'' என்றான் ராஜு.

மறுநாள் காலையில் கோவைக்கு ரயிலில் கிளம்பினார்கள். அகிலாவும் அத்தையும் வழியனுப்பி வைத்தனர்.

ரயில் கிளம்பும் பொழுது, அவசர அவசரமாக பெட்டியில் ஏறி, ராஜுவின் இருக்கைக்கு நேர் எதிரில் ஒருவர் வந்தமர்ந்தார்.

அந்தப் பெரியவரை எதிர் இருக்கையில் பார்த்து ராஜுவும் ராதிகாவும் திகைத்துப் போனார்கள்.

(தொடரும்)



கரண்டிவாயன்

பெயரைக் கேட்ட உடனே அதன் உருவத்தை கற்பனை செய்து விடக் கூடிய பறவை கரண்டிவாயன். ஆங்கிலத்தில் spoonbill. கொக்கு, நாரை போன்ற பறவைகளின் உருவத்தை ஒத்திருந்தாலும் கரண்டிவாயனின் அலகை வைத்து அதை நாம் சுலபமாக அடையாளம் கண்டுவிட லாம். அலகு நீண்டு, தட்டையாக, முன்பகுதி கரண்டி போல் அகன்று இருப்பதால் இப்பெயர் வைக்கப்பட்டுள்ளது.

சிறிய வெள்ளை நிறத் தலை, இளஞ்சிவப்பு மார்பு, வெள்ளையும் இளஞ்சிவப்பும் கலந்த பெரிய இறக்கைகள், நீண்ட மெல்லிய கால்களுடன் கரண்டிவாயன் காட்சி தரும்.

இரண்டரை அடி உயரமிருக்கும். இறக்கையின் நீளம் நான்கரை அடி.

கரண்டிவாயன் மாங்குரோவ் எனப்படும் சதுப்பு நிலக் காடுகள், உப்பு ஏரி நீர்த் தேக்கங்கள் போன்ற














எஸ்.சுஜாதா

வற்றுக்கு அருகில் கூடு கட்டுகிறது. அடி மரம் அல்லது புதர்ச் செடிகளில் கூடுகளை அமைக்கும். கூடு மிகவும் ஆழமாக இருக்கும். அதில் பெண் கரண்டிவாயன் 2 அல்லது 3 முட்டைகள் வரை இடும். மங்கிய வெள்ளை நிறத்தில் புள்ளிகளுடன் முட்டைகள் காணப்படும். முட்டையிட்ட மூன்று வாரங்களில் குஞ்சு பொரிந்து விடும். இறக்கைகள் வளர்வதற்கு 35 முதல் 42 நாட்கள்







வரை ஆகும். குஞ்சு கரண்டி வாயன் வெள்ளை நிறத்தில் லேசான இளஞ்சிவப்பு இறகு களுடன் அழகாக காட்சி தரும்.

குஞ்சு முழு வளர்ச்சிய டைந்து, தனியாக குடும்பம் நடத்த மூன்று வருடங்கள் ஆகும்.

நாரை, கொக்குகளைப் போன்று கரண்டிவாயன்களும் கூட்டம் கூட்டமாகவே வசிக் கின்றன.

பெரும்பகுதி நேரத்தை தண்ணீரிலேயே செலவிடு கின்றன. தண்ணீரை உறிஞ்சி, அத்தண்ணீருடன் வந்த சிறிய மீன்கள், நத்தை, பூச்சிகள், சிப்பிகள், இறால் போன்றவற்றை வைத்துக் கொண்டு அலகின் இரு புறத்திலும் தண்ணீரை வடிகட்டி விடுகின்றன. பிறகு உணவை விழுங்குகின்றன. இது தவிர தாவரங்கள், விதைகளை யும் சாப்பிடுவது உண்டு.

கரண்டிவாயன் கழுத்தை முன்னோக்கி நீட்டி, இறக் கையை விரித்து பறக்கும் போது அழகாக இருக்கும்!

ஃபுளோரிடா, டெக்ஸாஸ், பஹாமாஸ், கரீபியன், தென் அமெரிக்காவில் இவை அதிகம் வசிக்கின்றன.

கரண்டிவாயன் இறக்கை களுக்காக அதிக அளவில் வேட்டையாடப்பட்டு, எண்ணிக் கையில் குறைந்தது. தற்போது வேட்டை தடை செய்யப்பட்டுள் ளது.

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு



மார்ச் இதழில் அறிவித்த போட்டியில் நிறையப் பேர் கலந்து கொண்டனர். ஆனால் பெரும்பாலானோர் தவறான பதில்களை அளித்துள்ளனர். சரியான விடையளித்தவர்களில் இருந்து 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

சரியான விடை:

I. 1. 22 நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. 2. 4,163 மைல் அல்லது 6,700 கி.மீ. 3. தெரியும் 4. மிங் 5. பாதுகாப்புக்காக

II. 1. ஜே.சி.போஸ் 2. மார்கோனி 3. அலெக்ஸாண்டர் ஃபிளமிங் 4. கிரஹாம்பெல் 5. தாமஸ் ஆல்வா எடிசன் 6. ஐசக் நியூட்டன்

பரிசு பெற்றவர்கள்:

1. எஸ்.கே.அபிஷேக், நெய்வேலி
2. ஆர்.சந்தோஷ்ராஜ், வேளிங்க பட்டரை, காஞ்சிபுரம் மாவட்டம்
3. ஆர்.பிரியதர்ஷினி, ஆறாம் வகுப்பு, அரியலூர்,
4. டி.தாமினி, திருவண்ணாமலை
5. பி.மணிகண்டன், பி.எஸ்.மே.நி. பள்ளி, பம்மல், சென்னை



''இந்தச் சமையல் எண்ணெய் யுடன் தர வேண்டிய ஃப்ரீ பொருள் எங்கே?

''இதுக்கு ஒண்ணும் ஃப்ரீ இல் லையே சார்!''

''என்னை ஏமாத்தப் பார்க்கிறே. இதுலே கொலஸ்ட்ரால் ஃப்ரீன்னு போட்டிருக்கே!''

- ஒய். யூனுஸ் சாரிக், ஆறாம் வகுப்பு, ஜீவனா பள்ளி, மதுரை

''பரீட்சைக்குப் படிடா!''

''நேத்து 'உனக்காக'ப் படின்னு சொன்னே. இப்போ பரீட்சைக்காகப் படிக்கச் சொல்றே. நாளைக்கு யாருக் காகப் படிக்கச் சொல்வியோ?''

- ஜோதி, ஸ்ரீபெரும்புதூர்



பரிசு ஜோக்ஸ்

யாருக்காகப் படிப்பது?



''நான்கு ஆரஞ்சுப் பழங்களை எட்டுப் பேருக்கு எப்படி பங்கிட்டுக் கொடுப் பாய்?''

''சாறு பிழிந்து ஜூஸாகக் கொடுப்பேன் சார்!''

- கே.என்.மகாலிங்கம், பாண்டிச்சேரி

''ஐயோ, அம்மா வலிக் குதே!''

''அப்புறம் சொல்லுங்க!''

''ஆடு, இலை, ஈ, உரல்...''

- ச. அபிநயா, ஏழாம் வகுப்பு, நெய்வேலி




கடைசிப் பரீட்சை!
பாடலிபுத்திர மன்னர் சுதர்ஸனின் மகன் வினய். குரு பிரம்மானந்தாவிடம் கல்வி பயின்று வந்தான். வினய் இளவரசன் என்பதற்காக எந்த வித சலுகையும் அளிக்கவில்லை குரு.
ஒரு நாள் -
சகல பாடங்களும் உங்களுக்குக் கற்றுக் கொடுத்துவிட்டேன். இனி நீங்கள் உங்கள் வீட்டுக்குச் செல்லலாம்.
எல்லா மாணவர்களும் வீடுகளுக்குச் சென்றனர். ஆனால் குரு வினய்யை மட்டும் போக அனுமதிக்கவில்லை. இதை அறிந்த அரசர், ஆஸ்ரமத்துக்கு வந்தார்.
மகாராஜாவுக்கு வணக்கம்.
© JUNGLE BELL CREATIONS
குருவே, என் மகனை மட்டும் தாங்கள் ஏன் இன்னும் அனுப்பவில்லை?
மகாராஜா, உங்கள் மகன் எல்லா பாடங்களிலும் சிறந்தவன். அவனுக்கு மேலும் சில பரீட்சைகளை வைத்திருக்கிறேன்.
வினய்யின் பரீட்சை முடியும் வரை ஆஸ்ரமத்தில் தங்குவதென அரசர் முடிவெடுத்தார்.



மறுநாள் காலை -
என் மகன் விறகுகளைச் சுமக்கிறானே?
என் மகன் இப்படி கடினமான வேலைகளை இங்கு செய்து வருகிறான் போலிருக்கு!
குருவே, விறகுகளைக் கொண்டு வந்து விட்டேன்.
நல்லது. இந்த ஆஸ்ரமத்தைச் சுத்தப்படுத்து.
வினய் நில்.
வினய், இங்கே இந்த மாதிரியான வேலைகளைத்தான் செய்கிறாயா?
அப்பா, இது குருவின் கட்டளை.
கட்டளையா?
நாளை நீ இந்த நாட்டை ஆளப் போகும் மன்னன். நீ இது போன்ற வேலைகளைச் செய்யலாமா?


நான் இதை அனுமதிக்க மாட்டேன்.
நீங்கள் எதுவும் சொல்ல வேண்டாம். இங்கு இளவரசன் என்பதெல்லாம் கிடையாது. குரு - சிஷ்யன் உறவு மட்டுமே!
குருவுக்கு எல்லா மாணவர்களும் சமம்தான். ஆஸ்ரம வேலைகளைச் செய்வதில் என்ன தவறு?
மகாராஜா, உங்கள் மகன் கடைசிப் பரீட்சையிலும் தேர்ச்சி பெற்று விட்டான்.
வினய் இப்போது எல்லா வற்றிலும் சிறந்தவன். அழைத்துச் செல்லுங் கள் அரசே!
குருவே, என் அறியாமையை மன்னியுங்கள்.
கடவுள் உங்களை ஆசிர் வதிப்பாராக!



எத்தனை முறை எடை பார்க்க வேண்டும்?

ஆசிரியர் புதிர் கணக்குப் போட ஆரம்பித்தார். "ஒரே அளவில் ஆறு இரும்புக் குண்டுகள் உள்ளன. நீங்கள் கண்ணால் பார்க்கும்போது அவற்றில் எந்த வேறுபாடும் தெரியாது; ஆனால் இவற்றில் ஒரு குண்டு மட்டும் மற்றதை விட எடை குறைவானது. குண்டுகளை நிறுத்துப் பார்க்க எடைக் கற்கள் கிடையாது. எடை குறைந்த குண்டைக் கண்டுபிடிக்க, குறைந்தது எத்தனை தடவை நிறுத்தால், குறைந்த எடையுள்ள குண்டைக் கண்டுபிடிக்க முடியும்?" என்றார் ஆசிரியர்.

சிறிது நேர யோசனைக்குப்பின், சுபா விளக்க ஆரம்பித்தாள்.

"தராசின் ஒவ்வொரு தட்டிலும் ஒவ்வொரு குண்டைப் போட வேண்டும். எடை சமமாக இருந்தால், அவற்றை எடுத்து விட்டு, அடுத்த இரு குண்டுகளைப் போட்டு இதேபோல் நிறுத்துப் பார்க்க வேண்டும். இதுவும் சமமாக இருந்தால், மீதமுள்ள இரு குண்டுகளைத் தராசுத் தட்டுக் கொன்றாய் வைத்து எடை பார்த்தால், எடை குறைவாக இருக்கும் தட்டு, அடுத்ததை விட மேலே உயர்ந்திருக்கும். இதில் உள்ள குண்டுதான் எடை குறைவானது எனத் தெரிந்து கொண்டு விடலாம் சார்" என்றாள்.

சுபா சொன்ன விடைதான் சரியானது என்பது போல் அனைவருக்கும் தோன்றியது. அப்போது எழுந்து நின்ற சங்கர், "சார், இரண்டு தடவை நிறுத்துப் பார்த்தாலே போதும்; குறைவான எடை கொண்ட குண்டைக் கண்டுபிடித்து விடலாம்" என்றான். எப்படி?

- மா.அழகுராஜன்,
இராஜபாளையம்

விடை: 46ஆம் பக்கம்

கோகில வாசம்!

சுமார் நான்காயிரம் ஆண்டு காலமாக மாமரங்கள் இருந்து வருகின்றன. இதன் தாவரவியல் பெயர் 'மாங்கிபெரா இண்டிகா'.

மாங்கனியைப் பற்றி வெளியுலகிற்கு முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் சீன யாத்ரீகரான யுவான் சுவாங்தான்.

'மாம்பழம் சாப்பிடாத ஆண்டு என் வாழ்நாள் வீணாகக் கழிந்த ஆண்டு' என்றார் கவி தாகூர்.

வடமொழி நூல்கள் மாம்பழத்தை அமிர்தப் பழம் எனக் குறிப்பிடுகின்றன.

பேரரசர் அக்பர் மாம்பழத்தின்மீது மோகம் கொண்டு பல்வேறு வகை மரங்களைக் கொண்ட மிகப்



பெரிய தோட்டம் ஒன்றை பீகாரைச் சேர்ந்த தர்பங்காவில் அமைத்தார். ஆர்வத்தோடு அவர் ஒரு லட்சம் மாமரங்களுக்கு மேல் தோட்டத்தில் வைத்து பயிராக்கினார் என்று சொல்லப்படுகிறது.

வசந்த தூதன் (பருவம்), கோகில வாசம் (குயில் தங்குமிடம்), மது தூதன் (நறுமணம்) போன்றவை மாமரத்தின் வேறு சில பெயர்கள்.

உலகில் உற்பத்தியாகும் மாம்பழங்களில் 60 சதவீதம் இந்தியாவில் உற்பத்தியாகிறது. தமிழ்நாட்டில் மாம்பழத்துக்குப் பெயர் பெற்ற மாவட்டம் சேலம்.

மாம்பழ உற்பத்தியில் இன்று இஸ்ரேல், தென்னாப்பிரிக்கா, மெக்ஸிகோ, மேற்கு இந்தியத் தீவுகள் ஆகியவையே இந்தியாவுடன் போட்டியிடும் பிற நாடுகள்.

- என்.ஜரினா பானு,
திருப்பட்டினம்

இஸ்ரேல் நாட்டில் ஒட்டகங்களுக்கு என்று தனி மருத்துவமனை உள்ளது. இங்கு அவற்றிற்கு ரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே, ஸ்கேன் போன்ற பரிசோதனைகள் செய்யப்படுகின்றன.

- நெ.இராமன்,
சென்னை



மலை இடுக்குகளில் கல்லறைகள்!!




ஓர் ஆரஞ்சுப் பழத்தில் உள்ளதை விட மூன்று மடங்கு அதிக வைட்டமின் 'சி' ஒரு மிளகாயில் உள்ளது. இதனால் நமக்கு நரம்பு வலிகள், வியர்க்குரு போன்ற கழலை கட்டிகள் குணமாகும். அத்துடன் செரிமானம் நன்கு நடைபெறவும் வியர்வை வெளியேறவும் உதவுகிறது. எனவே, மிளகாயை உணவிலிருந்து தூக்கி எறியாமல் சாப்பிடுங்கள்.

- க.சுதாகர்,
மாதேசம்பாளையம்

பாப்கார்ன் பிட்ஸ்

உலகின் மிகப்பெரிய மரம் கலிபோர்னியாவில் உள்ள 'சைனீஸ் விஸ்டீரியா.' இதன் கிளைகள் 150 மீட்டர் நீளம் உடையவை. 1892ம் ஆண்டு நடப்பட்ட இம் மரம் வருடத்திற்கு ஒன்றரை மில்லியன் பூக்களை மலரச் செய்கிறது.

- ஒய்.யூனுஸ் சாரிக்,
மதுரை





ஆப்பிரிக்காவின் காட்டுப் பகுதி ஒன்றில் கறையான்கள் ஓர் அடி உயரமும் 12 கிலோ மீட்டர் நீளமும் உடைய ஒரு குட்டி மலைத் தொடர் ஒன்றையே உருவாக்கி இருந்தன. அதில் ஒரு பகுதியைத் தோண்டிப் பார்த்தபோது, நீருக்காக அவை பூமியை நூறு அடி ஆழம் வரை குடைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

- குட்டி பிரசன்னா,
கரூர்

சீன அரச பரம்பரையினரின் சமாதிகள் உயர்ந்த மலை இடுக்குகளிடையே அமைந்திருக்கும். இந்தக் கல்லறை மாடங்களை மலைகளின் மீது கயிறு கட்டித் தொங்கியபடியே கட்டுவார்கள். சமாதிக்குள் ராஜ வம்சத்தின் தங்க நகைகளையும் பிற விலையுயர்ந்த உபயோகப் பொருள்களையும் இறந்தவரின் உடலோடு சேர்த்தே புதைப்பதால் இந்தப் பாதுகாப்பு.

- ஜெயஶ்ரீ,
சங்கரன்கோவில்



பாப்கார்ன் பிட்ஸ்

காலிஃப்ளவரில் இருக்கும் சக்தி புற்று நோயினை எதிர்த்து குணமாக்கும் என்று ஆராய்ச்சி மூலம் கண்டறிந்திருக்கிறார்கள். நமது உடம்பில் ஏற்படும் புற்று நோய்க் கிருமிகளை காலிஃப்ளவரில் இருக்கும் 'சல்போபேன்' என்ற வேதிப் பொருள் செயலிழக்கச் செய்யும். அதற்குத் தேவையான என்சைம்களை காலிஃப்ளவர் உற்பத்தி செய்கிறது.


- ச.அழகுவேல்,
க.தருமத்துப்பட்டி



முத்துக் குளிக்கலாமே!

—ஜாலி கேம்

உங்களுக்காக வீட்டிலேயே அமர்ந்து ஜாலியாக விளையாடக் கூடிய விளையாட்டை 48-49ஆம் பக்கங்களில் வழங்கியிருக்கிறோம்.



2 முதல் 4 பேர் வரை விளையாடலாம்; ஆளுக்கு ஒரு வண்ண பட்டன்கள், தாயக் கட்டை அல்லது சோழிகள் தேவை.

எப்படி விளையாடுவது?

* தாயம் போட்டு ஆரம்பியுங்கள்.
* 3-பறக்கும் மீன். 7க்குப் பறந்து செல்லுங்கள்.
* 10-ஆக்டோபஸ் அமில நீரைப் பீய்ச்சி அடிக்கிறது. ஓர் ஆட்டம் கிடையாது.
* 16-ஈல். அதன் வாலைப் பிடித்துக் கொண்டு 19க்குச் செல்லுங்கள்.
* 22-கடல் பாம்புகள் அதிக விஷமுள்ளவை. இரண்டு கட்டம் பின்னோக்கிச் செல்லுங்கள்.
* 26- கடல் குதிரை. மீண்டும் ஓர் ஆட்டம் நீங்களே ஆடவும்.
* 30-ஆ! சுறா! ஆட்டத்தை விட்டு வெளியேறுங்கள். (மீண்டும் தாயம் போட்டு நுழையவும்)
* 34-அன்பான டால்ஃபின். அதன் முதுகிலேறி ஜம்மென்று 45க்குச் செல்லுங்கள்.
* 44-ஐயோ! நீலத் திமிங்கிலம் 8க்குச் செல்லவும்.
* 48 - முத்துக் குளித்து விட்டீர்கள். வெற்றி உங்களுக்கே!

கருத்து : **விஜி**

படம்: **மகேஸ்**


அம்மாவைத் தேடி...
7
கதை : வாண்டுமாமா
சித்திரம் : மகேஸ்
இதிலே இளங்கோவுக்குத் தொடர்பு இருக்கும்.
ஏய்! அகிலா, அந்த நாத்தம் புடிச்ச நாயை விட்டுட்டு இப்படிவா.
இந்தச் செய்தியை உன்னால் தாங்க முடியாதுதான் அகிலா. தைரியமா இரு.
என் லட்டுவை என்னோடு இருக்க அனுமதிங்க மேடம், ப்ளீஸ்!
ம்...சரி... இந்தச் சூழ்நிலையில் உனக்கு அமைதி தேவை.
இந்திராவின் கை பட்டதும்...
உன்னை நாளைக்கே தெரு நாய்கள் கொட்டடிக்கு அனுப்பிடறேன்...
கர்...ர்...ர்... ரோ...ரோ!


ஏய், லட்டு ஏண்டா இப்படி?
அன்று அகிலாவைக் காண இளங்கோ வந்தார்.
அம்மாவைப் பற்றி ஏதாவது தகவல் உண்டா சார்?
இல்லேம்மா! நீ கவலைப்படாதே. எப்படியும் உன் அம்மாவை மீட்டுடுவேன்.
இந்திராவின் அலுவலக அறையில் -
அகிலாவை கவனமாக - நான் சொல்வது புரியுதில்லையா?
புரியுது இளங்கோ.
இந்த ஆளோடு நட்பாகவே பழகி இவன் திட்டத்தை அறியணும்.


ஏய்! எங்கே ஓடறே?
டவுனுக்குப் போறேன்... என் அம்மாவைத் தேடி....
டவுனுக்கா...? பார்த்தால் பாவமா இருக்கு...
இவங்க என்ன சொல்றாங்க புரியலியே?
நில்லு பாப்பா! வெளியே போக பாஸ் இருக்கா?
பாஸா? புரியலியே! என்ன பாஸ், எதுக்கு பாஸ்?
பள்ளியின் தலைமை யாசிரியரிடமிருந்து நீ வெளியே போய் வர அனுமதிச் சீட்டு. அது இல்லாம யாரும் வெளியே போக முடியாது பாப்பா!
ப்ளீஸ்!
எனக்கு இடப் பட்டுள்ள உத்திரவு - யாரையும் பாஸ் இல்லாமல் வெளியே விடக்கூடாதுன்னு.
எங்கம்மாவை யாரோ கடத்திட்டுப் போயிட்டாங்க. அது விஷயமா...


இந்தக் கதையெல்லாம் வேணாம். கேட்டை திறக்க முடியாதும்மா. மன்னிச்சுடு!
ஏய், புதுசு! நீ டவுனுக்கு அவசியம் போகணுமா?
வெளியே போக 'பாஸ்' தேவைன்னு எனக்குத் தெரியாது.
அதோ ஒரு வேன்... எப்படியாவது தப்பிக்கணும்!
அகிலா லாண்டரி வேனின் மூட்டை களிடையே பதுங்கிக் கொண்டாள்.
இளங்கோ என்னை அந்தப் பள்ளியில் சேர்ப்பானேன்? என் அம்மா கடத்தப்பட்டதற்கும் இதற்கும் தொடர்பு உண்டா?
தொடரும்



அன்புள்ள ஜக்கு...

• எம்.எஸ்.சாருமதி,
கொடுங்கையூர்

? ஆண் மயிலுக்கு மட்டும் அழகிய தோகை ஏன் ஜக்கு?

ஆண் மயிலுக்கு மட்டும் அழகிய தோகை ஏன்?

மயில் என்று இல்லை, பொதுவாக உயிரினங்களில் ஆண் இனம் கண்கவர் வண்ணம், இனிமையான குரல், அழகான தோகை என்று ஏதாவது ஒரு சிறப்பைப் பெற்றுள்ளது. இதற்குக் காரணம் பெண் இனத்தைக் கவர்வதற்கே!

• ஆர். பல்லவராஜன்,
அறந்தாங்கி

? கால்கள் மரத்துப் போவது ஏன் ஜக்கு?

கால்களை மடக்கி வைத்திருக்கும் போது ரத்த ஓட்டம் சிறிதளவு பாதிக்கப்படுகிறது. இதனால் திசுக்கள் குறைந்த அளவு ஆக்ஸிஜன் நிலையில் இருக்கும். அப்போது சுறுசுறு வென குத்துவது போலவும் தோன்றும். சில நிமிடங்களில ரத்த ஓட்டம் சீரானவுடன் இது மறைந்து விடும் பல்லவராஜன்.


• டி.வினோதினி, ஒசூர்


? ஜக்கு, இந்தக் கோடை விடுமுறையில் நாங்கள் டெல்லி போறோம். உனக்கு என்ன வேணும்?

உங்க அன்புக்கு ரொம்ப நன்றி வினோதினி. நீங்கள் சுற்றுலா சென்ற அனுபவத்தை கோகுலத்துக்கு எழுதி அனுப்பினாலே போதும், அதுவே பெரிய பரிசு!

• என். நாகராஜ்,
உடுமலைப்பேட்டை

? கோடை வெயிலுக்கு எங்கள் வீட்டில் இளநீர், பழங்கள் போன்றவற்றை அதிக






விலை கொடுத்து சாப்பிட இயலாது ஜக்கு. எங்களால் எப்படி சமாளிக்க முடியும்?

உங்கள் வீட்டில் மட்டுமல்ல; பொதுவாக எல்லோர் வீட்டிலும் தினமும் இளநீர், பழங்கள் போன்றவற்றைச் சாப்பிட அதிகம் செலவழிக்க இயலாது நாகராஜ். வெள்ளரிக்காய், தர்பூசணிக் கீற்று, நீர்மோர், கிரணிப்பழம், நுங்கு, பானகம், எலுமிச்சம் பழச்சாறு போன்ற வற்றைச் சாப் பிட அதிகம் செல வழிக்க வேண்டியதில்லை, தெரியுமா?

- **தினேஷ், மதுரை**


? ஜக்கு, உன் போட்டோ ஒன்றை கோகுலத்தில் போடு. நீ எப்படி இருப்பேன்னு பார்க்க ஆர்வமாக இருக்கிறது.

ஒவ்வொரு கோகுலம் இதழிலும் ஜக்கு பகுதியில் என்



படம் அழகாக (!) வெளி வந்து கொண்டிருக்கிறதே தினேஷ்! நீங்கள் பார்த்ததில்லையா?

பாம்பு கடித்தால் என்னாகும்?



இன்றும் ஒரு படம்...

எங்கள் கிராமத்தில் நல்லது, கெட்டதுகளில் இரவு முழுவதும் படம் போடுவார்கள். நான் அன்று மூன்றாவது படத்தின் இடைவேளை வரை இருந்தேன். அதன்பின், வீடு திரும்பினேன். தாத்தா காற்றாட முற்றத்தில் படுத்திருந்தார். நான் வாசலை மிதிப்பதற்கும் ஒரு நல்ல பாம்பு நுழைவதற்கும் சரியாக இருந்தது. நான் சத்தம் போட்டு எல்லோரையும் எழுப்பி விட்டேன். உடனே பக்கத்தில் உள்ளவர்கள் பாம்பை அடித்து விட்டனர். “நல்ல வேளை பேரன் வருவதற்கும் பாம்பைப் பார்ப்பதற்கும் சரியாக இருந்திருக்கிறது. இல்லை என்றால் இன்றும் படம் போட்டு இருப்பார்கள்” என்றார் ஒருவர். எல்லோரும் சிரித்து விட்டனர்.

- பா. இசக்கிமுத்து,
கோயம்புத்தூர்

ஸ்பூன்

அன்று நாங்கள் எல்லோரும் பொருட்காட்சிக்குச் சென்றிருந்தோம். பொருட்காட்சியைச் சுற்றிப் பார்த்த பின்பு எல்லோருக்கும் களைப்பாக இருந்தது. அதோடு பசியும் வந்து விட்டது. எனவே அங்கிருக்கும் கேன்டீனில் வாங்கிச் சாப்பிட்டோம். சாப்பிட பிளாஸ்டிக் ஸ்பூன் வைத்தார்கள். நாங்கள் சாப்பிட்ட பின்பு எங்களுடைய ஸ்பூன்களை மட்டும் என் அம்மா எடுத்து, அலம்பி வைத்துக் கொண்டார். நான் என் அம்மாவிடம், “எல்லோரும் நம்மையே பார்க்கிறார்கள். ஏன் இப்படி அல்பமாக நடந்து கொள்கிறீர்கள்? நம் வீட்டில் ஸ்பூனா இல்லை?” என்று கடிந்து கொண்டேன். அதற்கு அம்மா “நம் வீட்டில் ஸ்பூன் இல்லாமல் இல்லை, நாம் இப்படியே தட்டில் வைத்து விட்டுச் சென்றால், இந்த ஸ்பூனையே கழுவி விட்டு, அடுத்தவர்களுக்குக் கொடுக்கக் கூடாது அல்லவா?

நினைவில் நின்றவை...



அதனால் தான் இப்படி செய்தேன்'' என்றவுடன் என் அம்மா அடுத்தவர்களின் நலனிலும் அக்கறை காண்பிப்பது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.


- ஆர்.அம்பிகா,
மதுரை

பிடிக்காதா?

சிலர் எனக்கு கணக்குப் பிடிக்காது, ஆங்கிலம் வராது என்பர். அது நம் மனதைப் பொறுத்த விஷயம். நாம் எதை வெறுக்கிறோமோ அது அடிக்கடி நம் நினைவிற்கு வந்து நம்மைக் குழப்பும், பயமுறுத்தும். அதனை விட்டு நாம் விலகிச் செல்ல விரும்புவோம். ஆனால் பிடிக்காத ஒன்றை விட்டு விலகிச் செல்ல செல்ல அதன் நினைவுக்கு அருகிலேயே செல்வோம். அப்படியில்லாமல் நமக்குப் பிடிக்காதவற்றுக்கு அருகில் நாம் செல்லச் செல்ல அதன் மீது உள்ள வெறுப்பு நீங்கிவிடும். அப்படித்தான் ஒரு வெளி நாட்டு எழுத்தாளருக்கு நேர்ந்ததாம். அவருக்கு பாரீஸ் டவர் மீது மகா வெறுப்பாம். ஆனால் அது எங்கும் தெரிவதால் அவருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அந்த வெறுப்புணர்வு அவரைச் சரிவர எழுதவிடாமல் செய்தது. திடீரென்று அவருக்கு ஒரு ஐடியா தோன்றியது. அந்த மனிதர் பாரீஸ் டவருக்கு அடியில் சென்று அமர்ந்து எழுதத் தொடங்கிவிட்டார். அவர் அந்த அறையிலிருந்து நகரைப் பார்க்க பாரீஸ் டவர் தெரியவில்லை. அந்த மன உளைச்சலின்றி எழுத ஆரம்பித்தார். ஆகவே பிடிக்காத சப்ஜெக்ட்டுகளை விரும்பிப் படியுங்கள் அது உங்களுக்குப் பிடிக்கும்'' என்றார் தலைமை ஆசிரியர் சரோஜா.



- எஸ். டேனியல் லியோ பிரபு,
பத்தாம் வகுப்பு,
செயின்ட் ஜோசப் பள்ளி, மதுரை



சிரித்தால் முத்து உதிரும்!

செல்வியின் குடும்பம் மிகவும் வறுமையில் வாடியது. ஒருநாள் செல்வி மாடு மேய்க்கப் போனாள். ஒரு மரத்தடியில் உட்கார்ந்து பரீட்சைக்குப் படிக்க ஆரம்பித்தாள். படிப்பு சுவாரசியத்தில் மாட்டைக் கவனிக்கவில்லை. இருட்ட ஆரம்பித்ததும் மாட்டைத் தேடினாள். மாடு கிடைக்கவில்லை. நீண்ட நேரப் பயணத்தின் முடிவில் ஓர் ஒற்றையடிப்பாதை தெரிந்தது. அந்தப் பகுதியே பூத்துக் குலுங்கி ரம்மியமாய் இருந்தது. செல்வி பாதையில் நடக்க ஆரம்பித்தாள்.

எண்ணற்ற செடிகள், கொடிகள், மரங்கள். அவள் இதுவரை இத்தனை வண்ணமயமான பூக்களைப் பார்த்ததேயில்லை. மூக்கைத் துளைக்கும் இனிய வாசம்! பார்க்க பார்க்க சலிக்கவேயில்லை.

சிறிது தூரத்தில் ஒரு பெரிய மாமரம் தெரிந்தது.



புதுவை ரா.ரஜனி

செல்வி அதனருகே சென்றாள். நிமிர்ந்து பார்த்தாள். உச்சியில் மரம் முழுவதும் பழங்கள் நிரம்பி வழிந்தன.

'இவ்வளவு பழங்களா?' செல்வி யோசித்துக் கொண்டிருந்தபோது...

''பாப்பா நான் மாமரம்தான் பேசறேன்! எனக்கு ஓர் உதவி செய்வாயா..?''

''என்ன உதவி...?''

''என் மேலே நிறையப் பழுத்த பழங்கள். பாரம் தாங்க முடியவில்லை. கொஞ்சம் பழங்களை உலுக்கிவிட்டுச் செல்வாயா?''

''சரி...!'' என்றவள், மரத்தை உலுக்கினாள். பொலபொலவென்று பழங்களும் செங்காய்களும் பாதையில் விழுந்தன. மரம் நிமிர்ந்து நின்றது.

''மிகவும் நன்றி பெண்ணே! என் பாரம் குறைந்து நான் மகிழ்ச்சியாய் இருக்கிறேன். எனது ருசியான பழங்களை நீ எடுத்துச் செல்லலாம்...!''



அவள் ஒரு பழத்தை மட்டும் எடுத்துக் கொண்டாள். வாழ் நாளில் அப்படியொரு சுவையை அவள் கண்டதில்லை!

தொடர்ந்து நடந்தாள்.

வழியில் ஒரு யானை, கால்களில் சங்கிலியால் கட்டப் பட்டு நின்றிருந்தது. செல்வி அதனைப் பரிதாபத்தோடு பார்த்தாள்.

யானையோ அவளைக் கண் டதும் மகிழ்ச்சியுடன் தும்பிக்கை யைத் தூக்கி, "குட்டிப் பெண்ணே, எனக்கு ஓர் உதவி செய்வாயா..?" என்று கேட் டது.

"நிச்சயமாகச் செய்வேன்...!"

"அந்தத் தென்னை ஓலைக் கட்டுகளை என் பக்கம் கொஞ் சம் இழுத்துப் போடுவாயா? எனக்குச் சாப்பிட வேண்டும். பசி ரொம்ப இருக்கு!"

ஓலைக் கட்டுகளை அதன ருகில் இழுத்துப் போட்டாள். அது மளமளவென்று அவற்றைச் சாப்பிட்டு முடித்து, சந்தோஷ மாய்ப் பிளிறியது.

"உனக்கு இன்னொரு உதவி செய்யட்டுமா...?" - செல்வி கேட் டாள்.

"என்ன உதவி...?"

"உன் கால் சங்கிலியை அவிழ்த்து விடட்டுமா..?"

"ஓ...!"

அவள், சங்கிலியிடமிருந்து விடுவித்தாள். யானை நன்றிப் பெருக்குடன் தனது தும்பிக்கை யால் அவளை ஆசீர்வதித்து விட்டு, வனத்துள் மறைந்தது.

எத்தனை முறை எடை பார்க்க வேண்டும்?



முதலில் தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று, மூன்று இரும்புக் குண்டுகளை வைக்க வேண்டும். இரண்டு தட்டில் ஒன்று எடை குறைவைக் காட்டும். இப்போது இரண்டாவது தடவையாக எடை குறைந்த தட்டில் உள்ள மூன்று குண்டுகளில் ஒன்றை எடுத்துத் தனியாக வைத்து விட்டு, மீதி இரண்டு குண்டுகளையும் தட்டுக்கு ஒன்றாக வைக்க வேண்டும்.

இப்போது இரண்டு தட்டும் சமமாக இருந்தால், தனியாக எடுத்து வைத்திருக்கும் குண்டுதான் எடை குறைவானது. இப்படி இல்லாமல் தட்டுகளில் ஒன்றில் எடை குறைந்த குண்டு இருந்தால் அந்தத் தட்டு மற்ற தட்டை விட, மேலே உயர்ந்து இருக்கும். இப்போது எடை குறைவான குண்டைக் கண்டுபிடித்து விடலாம்.

அவள் தனது பயணத்தைத் தொடர்ந்தாள். தூரத்தே ஒரு குடிசையைக் கண்டாள். அருகே சென்று வீட்டினுள் நுழைந்த போது, முழுவதும் நரைத்த தலையுடன் ஒரு குடுகுடு கிழவி அமர்ந்திருந்தாள். இவளைப் பார்த்ததும் தன் இடுங்கிய கண்களால் நோக்கிய கிழவி -

"என் செல்லக்குட்டி! எனக்கு ஓர் உதவி செய்வாயா..?" என்றாள்.

"செய்வேன் பாட்டி..!"

"நான் நல்ல தண்ணீர் குடித்து முப்பது வருஷங்களாச்சு. அதோ தெரியும் அந்தத் தாமரைக் குளத்திலே எனக்கொரு குடம் நல்ல நீர் வேண்டும்...!"

குடத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினாள். அந்தக் குளத்தில் ஏழு வண்ணத் தாமரைகள் பூத்திருந்தன. குடத்தை பளிங்கு நீரில் நன்கு சுத்தம் செய்துவிட்டு நீரை முகர்ந்து கொண்டு வந்தாள் செல்வி.

"எங்கே வைக்கட்டும் பாட்டி?"

"அடுப்புக்குப் பக்கத்திலே வையம்மா. அப்படியே அந்தக் கொதிக்கும் சாதத்தைக் கொஞ்சம் கஞ்சி வடிச்சு வெச்சுட்டுப் போயேன்...!"

செல்வி செய்து முடிக்க, அவளது செயல் நேர்த்தியையும் உதவியையும் கண்டு கிழவி வாழ்த்தினாள்.

"ரொம்பச் சமர்த்தா இருக்கியே! நீ நன்றாக வாழ்வாய். நீ சிரிச்சா முத்து உதிரும்" என்று ஆசிர்வதித்தாள்.



"அம்மா, விளையாடப் போறேன்மா..."

"இந்தக் கிழிசல் சட்டையோடயா?"

"இல்லம்மா என் நண்பன் ராஜாவோட!"

- விசாகன்

செல்வி வந்த வழியே திரும்பினாள். வழியிலே தான், முன்பு கண்ட யானையைக் கண்டாள். யானை மண்டியிட்டு அவளைத் தன் முதுகில் ஏற்றிச் சென்று, மாமரத்தின் அடியில் இறக்கிவிட்டது.

மாமரம், "வா... என் தங்கப் பெண்ணே!" என்று வரவேற்றது.

"பிறர்க்கு உதவி செய்த இந்த குட்டிப் பெண்ணுக்கு என் அன்புப் பரிசு...!" என்ற மரம் நிறையப் பொன்னும் பொருளும் கொடுத்து வழியனுப்பியது.

மகளைக் காணாமல் தவித்த பெற்றோர்கள் அவளைக் கண்டதும் மகிழ்ந்தனர். செல்வச் செழிப்போடு வாழ்ந்தனர்.


விளக்கம் 35 ஆம் பக்கம்
1 2 3 4 5
32 33 34 35 36 37 38 39 40 41 42 43 44 45 46 47 48


குளிக்கலாம்!

—ஜாலி கேம்



நல்லதைக் கொடுத்து நல்லதைப் பெறு!

கதை, படம்: ராம்கி





மாலாவுக்கு இது புது அனுபவம். அழுது கொண்டே அம்மா விடம் நடந்ததைச் சொன்னாள்.
அப்படியா! சரி, நீ திரும்பவும் மலைக்குப் போய் 'நீ ரொம்ப நல் லவள்'னு சொல் லிட்டு வா...
அம்மா சொன்னபடியே மலைக்குப் போய், கத்தினாள் மாலா.
நீ... ரொம்ப நல்லவள்...
நீ ரொம்ப நல்லவள்...
பதிலுக்கு மலையும் எதிரொலித்தது. மாலாவுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. துள்ளிக் குதித்தபடி அம்மாவிடம் சொல்ல ஓடினாள்.
நம்வாழ்வும் எதிரொலியைப் போன்றதுதான்! நாம் அன்பை ஒலித்தால், அன்பும் அதையே எதிரொலிக்கும்.

போவோமா புது உலகம்!



கண்டுபிடிப்புகளின்

உலகிலேயே அதிக மக்கள் தொகை உள்ள நாடு சீனா. உலகில் ரஷ்யாவுக்கும் கனடாவுக்கும் அடுத்த பெரிய நாடும் சீனாதான். சீனா ஆசியா கண்டத்தின் மையத்தில் உள்ளது. உலகின் பழமையான நாகரிகங்களில் ஒன்று சீனாவுடையதுதான்! இது 3500ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாறு உடையது. சீனாவின் பழங்காலப் பெயர் 'ஸுயாங் ஹுவா'. 'மத்திய நிலம்' என்பது இதன் பொருள். மனித இனத்தின் முன் னோடியான 'பீகிங் மனிதன்' சீனாவில்தான் வாழ்ந்தான் என புதை படிம வரலாறு சொல்கிறது.


சீனா அதன் கடல் பகுதியில் உள்ள 3400 குட்டித் தீவுகளையும் உள்ளடக்கியது. தென் சீனக் கடலில் உள்ள 'ஹாய்னான்' தீவுதான் மிகப் பெரியது. சீனாவின் தலைநகர் பீஜிங். பெரிய நகரம் ஷாங்கை. சீனாவை மஞ்சூரியா, வட சீனா, மத்திய சீனா, தென் சீனா என 4 பகுதிகளாகப் பிரிக்கின்றனர். உலக மக்களில் 1/5






பகுதி சீனாவில் வாழ்கின்றனர்.

சீனா காடுகள், மலைகள், பள்ளத்தாக்குகள், வறண்ட நிலங்கள், பாலைவனங்கள், பீடபூமி, கடற்கரைப் பிரதேசங்கள் என பல வகைப்பட்ட நிலப்பரப்புகளைக் கொண்டது. இயற்கை வளங்களும் கனிவளங்களும் நீர் வளங்களும் அதிகம் உள்ள நாடு சீனா. மலை







பிறப்பிடம்!

சூழ்ந்த, உலகின் உயரமான திபெத்திய பீடபூமி இங்குதான் உள்ளது. உலகின் அழகுக் களஞ்சியமான 'குய்சோயூ' பகுதி, சுண்ணாம்பு கற்களாலும், தூண் போன்ற சிகரங்களாலும் சூழப்பெற்றது.

சீனாவில் 12 சதம் மட்டுமே தட்டையான நிலப் பரப்பு உள்ளது. இங்கு 'யாங்க்ட்ஸீ', ஹுவாங் ஹோ, ஸீ ஜியால் என்ற மூன்று பெரிய ஆறுகள் உள்ளன. இதில் 'யாங்க்ட்ஸீ' ஆசியாவின் பெரிய நதி; உலகின் நான்காவது பெரிய நதி. இது ஹுவாங் ஹோ ஆற்றை விட 10 மடங்கு நீர் அதிகம் உடையது. 'ஹுவாங்ஹோ' ஆறுதான் சீனாவின் இரண்டாவது



மோகனா

பெரிய நதி. இதன் வேறு பெயர் 'மஞ்சள் ஆறு'; இதன் புனைப் பெயர் சீனாவின் துயரம்.

சீனா கோடையில் அதிக வெப்பமும் குளிர்காலத்தில் அதிக குளிரும் உள்ள நாடு. இங்கு வருடத்திற்கு 8 முறை 'டைபூன்' என்ற பேய்ச் சுழற்காற்று வீசுவதுடன், மழையையும் கொண்டு வரும். பொதுவாக கோடை காலத்தில் மழை அதிகம். கிழக்குப் பகுதியில் வருடத்தில் 40 நாட்களும் கடற் கரையில் 80 நாட்களும் பனி மூடி காட்சி தரும்! சீனா தொழில் ரீதி யாக வளர்ந்தாலும் கூட, இம் மக்கள் அடிப்படையில் விவசாயி களே! 64% மக்கள் கிராமத்தில் தான் வாழ்கின்றனர்.

சீனாவில் சக்தி வளங்களும் அதிகமாக கிடைக்கின்றன. இங்



• பீகிங் மனிதன்



• பீங்கான் பொருட்கள்

குள்ள நிலக்கரி சுரங்கம் உலகி லேயே பெரியது. சவூதி அரேபி யாவுக்கு அடுத்தபடியாக பெட் ரோலியம் கிடைப்பது இங்குதான். உலகின் மிக அதிகமான இயற்கை கிராபைட் உற்பத்தியும் இங்கு தான்!

சீனாவின் பரவலான சீதோஷ்ண நிலையால் அதிக வகையான தாவர இனங்களும் அரிய வகை தாவர இனங்களும் நாடுமுழுவதும் காணப்படுகின் றன. முதலை இனத்தைச் சேர்ந்த அலிகேட்டர், சலமான்டர், மேற்கு சீனாவிற்கே உரித்தான பெரிய பாண்டா', சீன நீர் மான் போன் றவை இந்நாட்டின் சிறப்பு விலங் கினங்கள். கிப்பான், மெக்காக் போன்ற குரங்கினங்கள், கரடி, புலி, சிறுத்தை, குளம்புள்ள கலைமான், கஸெல்லா, காட்டுக் குதிரை, செம்போத்து பறவை, மயில், கிளி, நாரை, கொக்கு என பல வகை உயிரினங்கள் வாழ்கின்றன. கடல் பகுதியிலும் செழிப்பாக உயிரினங் கள் காணப்படுகின்றன.

1949ல் அக்டோபர் 1ம் தேதி முதல் சீனா கம்யூனிச அரசாங்கமாக மாறியது. ஐந்தாண்டு திட்டங்கள் மூலம் நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் வழி கோலியது. இப்போது அங் குள்ள மக்களின் வாழ்நாள் 75 வயதாக உயர்ந்துள்ளது. பிறப்பு விகிதம் கணிசமாக குறைந்துள்ளது. இங்கு புத்த மதம், கன்ஃபூஷியஸ், டாவூயிசம், லாமாயிசம், கிறிஸ்த்தவம், இஸ்லாம் எனப் பல மதங்கள் உண்டு.

சீன எழுத்துகள் 3000 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி விட்டன. பன்னிரண்டுக்கும் மேற் பட்ட பேச்சு மொழிகள் இருந்

தாலும் எல்லாவற்றிற்கும் ஒரே எழுத்துமொழிதான். கம்யூனிச ஆட்சிக்குப் பின் மாற்றம் ஏற்பட்டு, 'மான்டரின்' என்ற மொழியே பள்ளிகளில் இரண்டாவது மொழியாக உள்ளது.

பட்டு உற்பத்தி சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன்பே செய்யப்பட்டது. சீனத்துப் பட்டு மிகவும் பிரபலம். பெட்ரோலியப் பொருட்கள், பருத்தி, பட்டு உடைகள், அரிசி, பன்றி இறைச்சி, இறால், டீ, எஃகுப் பொருட்கள், மற்ற உலோகங்கள், கார்கள், பொம்மைகள், விவசாய வேதிப் பொருட்கள், ரப்பர், கோதுமை, கப்பல், எலக்ட்ரானிக் பொருட்கள் போன்றவை ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டு, மற்ற நாடுகளுக்கு மலிவு விலையில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எலெக்ட்ரானிக் பொருட்கள் தயாரிப்பு, தீக்குச்சி தயாரிப்பு போன்று குடிசைத் தொழிலாக உள்ளது.

'ஹோமோ எரக்டஸ்' (Homo erectus) என்ற 'நிமிர்ந்த மனிதன்' மனிதனின் முன்னோடி. இவர்களின் தொல் எச்சங்களும் எலும்புகளும் (4.6 லட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய மனிதன்) இங்கே கண்டுபிடிக்கப்பட்டன. சீன மக்கள் கி.மு. 5500களிலேயே (இன்றிலிருந்து சுமார் 7500 ஆண்டுகளுக்குமுன்) நெல்லைப் பயிர் செய்தனர். அதன் பின் 500 ஆண்டுகள் கடந்து, ஹுவாங்ஹோ பள்ளத்தாக்கில் விவசாய சமூகம் வாழ்ந்தது.



* கன்ஃபூஷியஸ்

கி.மு.1700களில் வண்ணமிடப்பட்ட பாண்டங்களைச் சீனர்கள் பயன்படுத்தினர். சிற்பக் கலை, ஓவியக் கலை, தந்தக் கலை, கட்டடக்கலை, பீங்கான் கலையின் விற்பன்னர்கள் சீனர்கள்தான். மெல்லிய நீலநிற, ஒளிபுகும் பீங்கான்களைக் கண்கவரும் வனப்புடன் உருவாக்கினர். இதில் புராண விளக்க வடிவங்களையும் வாழ்க்கை காட்சிகளையும் வடித்து வைத்தனர். சீனக் கண்ணாடிகளை கி.மு.6ம் நூற்றாண்டுக்கு முன்னரே செய்தனர். அதன் பின் பக்கம் அலங்கார உருவங்கள் காணப்பட்டன. உலோகத் தொழில் நுட்பம், அரக்குப் பூசிய கைவினைப் பொருட்களையும் முதன் முதலில் தயாரித்தவர்கள் சீனர்களே!

உலகில் மனிதன் கட்டிய



கட்டடங்களில் மிக நீளமானது சீனப் பெருஞ்சுவர்தான். இதன் நீளம் 2400 கி.மீ.



சீனர்களின் கண்டுபிடிப்புகள் கணக்கில் அடங்காது. உலகின் முக்கியமான கண்டுபிடிப்புகள் சீனர்கள் தந்தவையே! ட்யாஸ் வம்ச காலத்தில் 'வாணவேடிக்கை' கண்டுபிடிக்கப்பட்டது. மரச்சக்கரம் பொருந்திய தள்ளுவண்டியை இவர்கள்தான் கண்டுபிடித்தனர். பட்டாசுகளையும் அவர்கள்தான் கண்டுபிடித்தனர். திசை பார்க்கும் காம்பஸ், நிலநடுக்கம் கண்டுபிடிக்கும் சீதோஷ்ண கடிகாரம், இடியாப்பம் செய்யும் அச்சு, மூங்கிலாலும் பட்டுத் துணியாலும் செய்த விசிறி, பட்டம், கூடை, செம்பும் இரும்பும் இணைந்த கலவை மூலம் உட்கூடுள்ள உருவங்கள், விவசாயத்திற்கு விலங்குகளைப் பயன்படுத்துதல், படகுகள், பொம்மை, நேரம் சொல்லும் முதல் கடிகாரம், பெரிய நீர்க் கடிகாரம், நீர் சக்தி மூலம் எரியும் பெரிய வெப்பச் சூளை, தங்கத்தைவிட மதிப்பு மிக்க ஜேடு (jade) என்னும் பச்சைக்கல், பேப்பர் கணக்கிடும் 'அபாகஸ்' முறை, அக்குபங்சர் மருத்துவம், திசை திருப்பும் சுக்கான், மூங்கில் இயந்திரத்தால் தானியத்தை பதப்படுத்தும் முறை... இப்படி ஏகப்பட்ட எண்ணிலடங்கா பொருட்களைச் சீனர்கள் கண்டுபிடித்தனர்.

உலகின் முதல் கோளரங்கம் (planetorium) இவர்கள்தான் கட்டினர். ஒயின்பானத்தை மயக்க மருந்தாகப் பயன்படுத்தினர். வரலாற்றுக்கு முன்பிருந்தே மூலிகை மருந்துகளைப் பயன்படுத்தினர். உலகின் அடிப்படைத் தேவைகளின் கண்டுபிடிப்பாளர்கள் சீனர்களே! கண்டுபிடிப்புகள் பிறந்ததே சீனத்தில் தான்! முதல் புத்தகம் தயாரித்ததும் இவர்களே! அச்சுக் கலை, எழுதும் மை, பேப்பர் மடிக்கும் கலையான 'ஒரிகாமி', பேப்பரை மழை கோட்டாகவும் ஜன்னலாகவும் குடையாகவும் பயன்படுத்தினர். போருக்கான ஆயுதம் கூட பேப்பரால் செய்யப்பட்டது. துப்பாக்கி மருந்தை எதேச்சையாக கண்டுபிடித்தனர். இயற்கை மருத்துவத்தின் விஞ்ஞானிகள் சீனர்கள்! சீனர்கள் 4000 ஆண்டுகளுக்கு முன்பே மண்டையோட்டைத் திறந்து, அறுவை சிகிச்சை செய்துள்ளனர்.

சீனர்கள் தங்களது அயராத உழைப்பால் உலகுக்கு கணக்கற்ற கண்டுபிடிப்புகளை வழங்கியுள்ளனர் என்றால் மிகையில்லை! ●

கணக்கைத் தேடி விடையைக் கண்டுபிடி!

I. ஒரு கூட்டுக் குடும்பத்தில் தாத்தா, மாமா, பாப்பா ஆகியோர் தடுமாறாமல் நன்கு நடப்பவர்களாகவும், பாட்டி, மாமி, அம்மா, அப்பா, அக்கா ஆகியோர் நொண்டி, நொண்டி நடப்பவர்களாகவும், அண்ணன், தம்பி, தங்கை ஆகியோர் நடக்காமல் முடங்கிக் கிடப்பவர்களாகவும், அத்தை குதித்து குதித்து நடப்பவராகவும் இருப்பது ஏன்?

- ஈ.லக்ஷ்மிப்ரியா,
ஆர்.டி.ஸிபிஎஃப்
மெட்ரிக் பள்ளி,
நீலம்பூர், கோவை

II. ஒரு தச்சர் நான்கு வீடுகளுக்குச் 'சட்டம்' மாட்டச் சென்றார். ஒவ்வொரு வீட்டிற்கும் 80 சட்டங்கள் தேவைப்பட்டன. வியாபாரியோ ஒரு குறிப்பிட்ட சட்டங்கள் மட்டுமே கொண்டு செல்கிறார். அவரிடம் இருக்கும் அதே அளவு சட்டங்கள் வீட்டுக்காரரும் கொடுக்கிறார். அதில் 80 சட்டங்களை மாட்டிவிட்டு மீதம் இருக்கும் சட்டங்களைக் கொண்டு அடுத்த வீட்டிற்கு மாட்ட வருகிறார். அவரிடம் மீதம் இருக்கும் அதே சட்டங்களை அந்த வீட்டுக்காரரும் கொடுக்கிறார். அங்கு 80 சட்டங்களை மாட்டிவிட்டு மீதம் இருக்கும் சட்டங்களை அடுத்த வீட்டிற்கு கொண்டு வருகிறார். அவரிடம் இருக்கும் அதே சட்டங்களை அந்த வீட்டுக்காரரும் கொடுக்க இப்படியே நான்கு வீட்டுக்கும் மாட்டிவிட்டு வீடு திரும்புகிறார். ஆனால் வியாபாரியிடம் ஒரு சட்டம் கூட மீதம் இல்லை! அப்படியென்றால் வியாபாரி கொண்டு சென்ற சட்டங்கள் எத்தனை?



- ஏ.ஜி.முகம்மது தௌபிக்
மேலப்பாளையம்

III. ஒன்பதாம் வாய்ப்பாடு பெருக்கல் மட்டும் தான் பொருந்தும். கூட்டுத் தொகை ஒன்பது வரும். ஒன்று முதல் 9,99,99,999 முடிய அதற்கு மேல் வரும் எண்களாக இருந்

தாலும் அந்த எண்ணை ஒன்ப தால் பெருக்கினால் அதில் வரும் கூட்டுத் தொகை ஒன்பதே வரும்.

- வெ.நீலாம்பாள்,
மன்னை

IV. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஐந்து கேள்விகளுக்கும் முடிவு எழுத்து 'ர்'

1. இந்தியாவில் தங்கம் கிடைக்குமிடம்
2. வைரத்திற்கு அடுத்தபடி கனம் உள்ள மிகக் கடினமான கல்
3. இந்தியாவில் விண்வெளி ஆய்வகம் உள்ள இடம்
4. பாக்டீரியாவைக் கண்டுபிடித்தவர்
5. மோட்டார் ஓடும் வேகத்தை அளக்கும் கருவி.

- சிவ.மணவழகி,
ஆதனூர்

V. ஒரு மாம்பழக்கடையில் விற்பனை மந்தமாகி சில பழங்கள் அழுகிவிட்டன. கடைக்காரன் அவற்றைத் தரம் பிரித்து நல்ல பழங்களைக் கூறு போட்டு விற்க நினைத்தான்.

ஐந்து ஐந்து பழங்களாகக் கூறு போட்டதில் 2 பழங்கள் மீதி வந்தன. ஏழு ஏழாக வைத்ததில் 4 பழங்களும், ஒன்பது ஒன்பதாக வைத்ததில் 6 பழங்களும் மீதி வந்தன. அப்படியானால் கடையிலிருந்த நல்ல பழங்கள் எத்தனை?

- ஆர்.பிரசன்னா,
கரூர்

VI. ஆனந்தன் கடைக்குச் சென்று முட்டைகளை வாங்கி வந்தான். வரும் வழியில் சைக்கிள் ஓட்டுபவன் ஒருவன் அவன் மேல் மோதியதால் அனைத்து முட்டைகளும் உடைந்து விட்டன.



சைக்கிள் ஓட்டி, 'பையில் எத்தனை முட்டைகள் இருந்தன? அதற்குரிய பணத்தைக் கொடுத்து விடுகிறேன்' என்றான்.

''நான் சொல்லும் கணக்குபடி விடை கூறி முட்டைகளை வாங்கிக் கொடு'' என்றான்.

''பையில் இருந்த முட்டைகள், அதை இரண்டாலோ, மூன்றாலோ, நான்காலோ வகுத்தால் ஒன்று மிஞ்சும். ஐந்தால் வகுத்தால் ஒன்றும் மிஞ்சாது'' என்றான்.

சைக்கிள் ஓட்டியும் நிதானமாக கணக்கு போட்டு முட்டைகளை வாங்கிக் கொடுத்தான். பையில் இருந்த முட்டைகள் எத்தனை?

- சு. கண்ணகி,
மிட்டூர்

விடைகள் - 91ம் பக்கம்

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவு கதைப் போட்டி



சிறுவர் இலக்கியம் செழிக்கத் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்ட அழ. வள்ளியப்பா, கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியர். அவர் நினைவாக இந்த ஆண்டும் போட்டி அறிவிப்பதில் கோகுலம் பெருமை கொள்கிறது!


1. இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+2 உட்பட) மட்டுமே கலந்து கொள்ளலாம்.
2. கதைகள் சிறுவர்களுக்கானதாக இருக்க வேண்டும். நகைச்சுவை, துப்பறிதல், சமூகம், வரலாறு, அறிவியல் என எதைப் பற்றி வேண்டுமானாலும் இருக்கலாம். சொந்தக் கற்பனை என்ற உறுதி மொழியுடன் அனுப்ப வேண்டும்.
3. வெள்ளைத் தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதலாம்.
4. பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகளை ஒட்டிய உறையை கதையுடனேயே இணைக்க வேண்டும். இது குறித்து எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
5. இதில் கலந்து கொள்ள கட்டணம் ஏதும் இல்லை. ஒருவரே எத்தனை கதைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
6. கதைகளை முதல் முறை வெளியிடும் உரிமை கோகுலத்திற்கே உண்டு. பிறகு இதன் உரிமை முழுவதும் ஆசிரியருக்கே.
7. முடிவு தேதி 31.5.2005. இதற்குப் பின் வருபவை பரிசீலனைக்கு ஏற்கப்படமாட்டா.
8. அயல்நாட்டில் உள்ளவர்கள், இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கட்டாயம் தர வேண்டும்.
9. கதைகளை 'ஆசிரியர், கோகுலம், 47, N.P. ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032' என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மேல் 'அழ. வள்ளியப்பா நினைவு கதைப் போட்டி' என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.
10. போட்டி குறித்து எழும் எவ்விதப் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் எடுக்கும் தீர்ப்பே முடிவானது.

முதல் பரிசு - ரூ. 500/-
இரண்டாம் பரிசு - ரூ. 300/-
மூன்றாம் பரிசு - ரூ. 200/-

ஞானப்பானை

அளவு கடந்த சோகத்தினால் ஞானியானவர் பலர். அதில் கேரளத்தில் வாழ்ந்த பூந்தானமும் ஒருவர். தன் அருமைக் குழந்தை திடீரென இறந்ததும் ஞானப்பானை என்ற பெயரில் பாகவதத்தைப் பாடல்களாகப் பாடினார்.

அதை யாராவது மேதை சரிபார்த்துத் தந்தால் நன்றாயிருக்கும் என்று நினைத்தார். நாராயண பட்டத்ரி 'நாராயணீயம்' என்ற பெயரில் பாகவதத்தை இயற்றியிருந்தார். நாராயணீயம் 1034 ஸ்லோகங்கள் கொண்டது. பத்து பாடல்கள் கொண்டது ஒரு தசகம். ஒவ்வொரு ஸ்லோகத்தையும் எழுதி முடித்ததும் ''அப்படி செய்தாயா? அப்படி நடந்ததா?'' என்று பட்டத்ரி கேட்க குருவாயூர் கண்ணன் 'ஆம்' என தலையசைத்து ஆமோதித்திருக்கிறார். அவர் ஆமோதிக்காத பாடலை பட்டத்ரி மாற்றி எழுதி சம்மதம் வாங்கியிருக்கிறார்.



அவரே இதைச் சரி பார்க்க பொருத்தமான நபர் என்று முடிவுக்கு வந்த பூந்தானம், அதிகாலை நிர்மால்ய தரிசனத்துக்கு பட்டத்ரி வரும்போது அவர் பின்னால் சென்று தன் விருப்பத்தை மெதுவாக எடுத்துரைத்தார்.

''எனக்கு இதுக்கெல்லாம் நேரமேது? போ, போ''

என்று அலட்சியமாய் சொல்லி விட்டார் நாராயண பட்டத்ரி.

"கோவிலில் நான்கு பேர் எதிரில் கேட்டதால் மறுத்திருக்கிறார் என்று தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டு பட்டத்ரி வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினார்.

கதவைத் திறந்த பட்டத்ரி பூந்தானத்தையும் அவர் கையிலிருந்த சுவடிக் கட்டையும் பார்த்ததும் சினம் கொண்டார்.

"ஒரு தடவை சொன்னா புரியாத அசமஞ்சமாயிருக்கியே! நீயெல்லாம் பாகவதம் பாடலேன்னு குருவாயூரப்பன் அழுதானா?வேற யார் கிட்டேயாவது போய்க் காட்டு" என்று முகத்திலடித்தாற் போல் கூறி கதவைச் சாத்தி, தாளிட்டார் பட்டத்ரி.


பூந்தானத்துக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. கேரளாவில் திடீர் திடீரென்று மழை பெய்யும். அப்போதும் பெய்தது. நனைந்து

ஆர்.பொன்னம்மாள்

கொண்டே தடுமாறியபடி வீடு வந்தார்.

ஈர ஆடையைக் கூட மாற்றாமல் பூஜை அறையில் உட்கார்ந்து கண்ணீர் சொரிந்தார். "பட்டத்ரி சொன்னது போல் எனக்கு ஏன் வீண் ஆசை?" என்று புலம்பினார்.

நாராயண பட்டத்ரி மாலை வேளையில் நாராயணீயம் பாடி அர்த்தம்



சொல்வார். ஏராளமானவர்கள் கேட்க வருவார்கள். குருவாயூர் கிருஷ்ணன் ஆமோதித்ததாயிற்றே! சிலர் மெய்சிலிர்த்து ஆனந்தக் கண்ணீர் பெருக்குவர். சிலர் 'ஆஹா', 'பேஷ்', 'சபாஷ்' என்றெல்லாம் வாய்விட்டுப் பாராட்டுவர்.

ஒவ்வொரு ஸ்லோகம் முடிந்ததும் "எவருக்காவது சந்தேகம் இருந்தால் கேட்கலாம்" என்பார். எவரும் இதுவரை வாய் திறந்ததில்லை.

பூந்தானத்தை விரட்டிய அன்றும் "ஸாந்திரானந்த..." என்ற முதல் ஸ்லோகத்தைப் பாடிவிட்டு அப்படி கேட்டார்.

எதிரே அமர்ந்திருந்த பதினைந்து வயதுப் பையன் எழுந்தான். "நான் கேட்க அனுமதியுண்டா?" என்று கைகட்டி வாய் பொத்திப் பணிவுடன் கேட்டான்.

அவனை ஏற இறங்கப் பார்த்தார் பட்டத்ரி. உடலெங்கும் கட்டுக்கட்டாய் பன்னிரண்டு நாமங்கள்; கட்டுக்குடுமி. தீர்க்கமான அழகிய கண்கள்; முகத்தில் பிரம்ம தேஜஸ்;

"கேளப்பா!" என்றார் கம்பீரமாக பட்டத்ரி.

"நீங்கள் சொன்ன அர்த்தத்தைவிட இது இன்னும் பொருத்தமாயிருக்காதோ?" என்று மற்றொரு அழகிய விளக்கத்தைக் கூற நாராயண பட்டத்ரி மட்டுமல்ல...! கூடியிருந்தவர்களும் அசந்து போய் கைதட்டி விட்டனர். சொன்னது கண்ணனாயிற்றே! பட்டத்ரிக்கு சம்மட்டியால் அடித்தது போலிருந்தது.

இப்படியே ஒவ்வொரு ஸ்லோகத்துக்கும் வேறொரு விளக்கம் கொடுக்க, கூடியிருந்த கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாய் கலைந்தது. பட்டத்ரியின் தலை கவிழ்ந்தது.

குருவாயூரப்பனைத் தியானித்தபடி இந்தப் பையன் யார் என்று பார்த்தார். எதிரிலிருந்த கண்ணன் மறைந்தான். அவரால் அசையவும் முடியாதபடி கை, கால்கள் வாதத்தால் முடங்கி விட்டன.

"கண்ணா! நாராயணீயம் பாடினேன்; வாதநோயைக் குணப்படுத்தினாய்! மீண்டும் இதென்ன சோதனை?" என்று அலறினார்.

யார் அந்தப் பிரபலம்?



தனது எழுத்துகளில் போரின் மீது கொண்ட வெறுப்பை வெளிப்படுத்தினார்.



''இன்னைக்கு மதியம் மேட்னி ஷோ போவோமா?''
''முடிஞ்சா போகலாம்!''
''முடிஞ்சா ஈவ்னிங் ஷோ தான் போக முடியும்!''

- விசாகன்

''பூந்தானத்தின் பாடல்களைப் படிக்காமலே 'அபத்தம்' என்றாய்! உன் பாடல்கள் கருத்து மாறின. பக்திக்கு மொழியோ, பாண்டித்யமோ முக்கியமல்ல! வேப்பத்தூர் நாராயண பட்டத்ரியின் அலங்கார பக்தியைவிட பூந்தானத்தின் எளிய பக்தியே எனக்கு உகந்தது. ஞானப்பானையைச் சரி பார்த்துக் கொடு. வாத நோய் நீங்கும்'' என்று குரல் மட்டும் கேட்டது.

சீடர்கள் உதவியோடு மாட்டு வண்டியில் ஏறினார் பட்டத்ரி. பூந்தானத்திடம் சீடர்கள் நம்பூதிரியின் வருகையைத் தெரிவிக்க, பூந்தானம் மகிழ்ச்சியும் பதற்றமும் கொண்டு ஓடி வந்து நாராயண பட்டத்ரியை உள்ளே அழைத்துச் சென்றார்.

''ஐயோ! மறுபடி உங்களுக்கு வாதம் வந்து விட்டதா? அதோடு சிரமப்பட்டு வந்திருக்கிறீர்களே! சொல்லி அனுப்பியிருந்தால் நான் வந்திருப்பேனே!'' என்று கலங்கினார்.

''பூந்தானம்! இந்த உன் அடக்கம்தான் குருவாயூரப்பனை ஈர்த்திருக்கிறது! நீ அன்ன ஆகாரமின்றிக் கிடக்கிறாய் என்று அவன் கவலைப்படுகிறான். என்னை மன்னித்துவிடு. முதலில் உன் 'ஞானப்பானை'யை எடுத்து வந்து படி. திருத்தம் இருந்தால் சொல்கிறேன்'' என்றார்.

பூந்தானத்துக்கு நடப்பது கனவா, நனவா என்று புரியவில்லை. 'ஞானப்பானை'யை பூந்தானம் படிக்க, ஆங்காங்கே மாற்றங்களைச் சொல்லிக் கொண்டு வந்தார் பட்டத்ரி. படித்து முடிந்ததும் வாதம் போயிருந்ததை உணர்ந்து மனம் நெகிழ்ந்தார்.


பிறகு தன் கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றி பூந்தானத்தின் விரலில் அணிவித்து ''ஞானப்பானை எழுதிய விரல்களுக்குப் பரிசு. எப்போதும் இதைக் கழற்றக் கூடாது'' என்று கூறி கட்டித் தழுவி விடை பெற்றார்.

புலியும் குரங்குகளும்!

கதை: மா. அழகுராஜன் படம்: சேகர்




விவசாயி தோட்டம் காடு குரங்குகள் பொம்மைப் புலி நிஜப்புலி

ஒரு  யின்  ல் உள்ள பயிர்களைக்  ல் இருந்த  நாசம் செய்து கொண்டிருந்தன. இதனால் ,  ஒன்றைத்  ல் வைத்தார். வழக்கம் போல் அங்கு வந்த  கள்,  யைப் பார்த்ததும் அதை  என்று நினைத்து தோட்டத்துக்குள் நுழையப் பயந்தன. இரண்டு நாட்கள் ஆகியும் அந்தப்  ஒரே இடத்தில் நகராமல் இருப்பதைப் பார்த்த  களுக்குச் சந்தேகம் வந்தது. சில  அதனை நெருங்கிச் சென்று பார்த்தபோது, அது வெறும்  என்பதைத் தெரிந்து கொண்டன. உடனே எல்லா  களும் அந்தப்  யைக் கடித்துப் பிய்த்து எறிந்தன. சில நாட்களுக்குப் பின்  ஒன்று பசியோடு தோட்டத்தில் வந்து படுத்திருந்தது. அந்தச் சமயம் அங்கு வந்த  இதுவும்  தான் என நினைத்து,  யின் அருகில் சென்றன. பசியோடு இருந்த  வேகமாகப் பாய்ந்தது.  உயிரைக் கையில் பிடித்தபடி ஓடின.




கண்டுபிடி... கண்டுபிடி...

உங்களின் விருப்பத்துக்காக இந்த மாதமும் சில ஜாலி புதிர்கள்...




I. இதில் எத்தனை அறுங் கோணங்கள் உள்ளன?


II. Aக்கும் Bக்கும் என்ன வித்தியாசம்?




III. எத்தனை சதுரப் பெட்டிகள் உள்ளன?




IV. முழு வட்டமா, உடைந்த வட்டமா?





V. இந்தப் படத்தில் ஒளிந்திருப்பது என்ன?

VI. இங்கு எத்தனை சக்கரங்கள் உள்ளன?



சொல்லிப் பழக...

குட்டையன் கட்டை
நெட்டையன் மொட்டை
மொட்டையும் கட்டையும்
முட்டிக்க மோதிக்க...

விடைகள்:

I. 7 அறுங்கோணங்கள்
II. தண்டவாளத்தின் இடது புறம் நின்றால் A போலும், வலது புறம் நின்றால் B போலும் தெரியும்.
III. 7 சதுரப் பெட்டிகள்(சற்று சாய்வாகப் பார்க்கவும்)
IV. முழு வட்டம்
V. நாய்
VI. 9

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம் :


1. கண்ணாடியில் இது தெரியும் (4)
9. கை என்பதை இப்படியும் அழைக்கலாம் (3)
13. யாரிடமும் __________ கண்டுபிடிக்கக் கூடாது (2)
14. ஒளி உமிழும் பூச்சி (4)
16. காதுகளில் அணியும் ஆபரணம் (4)

வலமிருந்து இடம் :

3. பூமி (4)
4. அன்பிற்கு உண்டோ அடைக்கும் ____ (2)
5. நாற்றுகளின் நடுவே முளைக்கும் இவற்றை அப்புறப்படுத்த வேண்டும் (2)
6. தென்னை, பனை, வாழை மரங்களில் இது கிடையாது (2)
8. ராசிகளில் ஒன்று (3)
10. இதைத் திறந்தால் தண்ணீர் வரும் (3)
11. கடற்கரையில் நாம் நின்றால் இது வந்து மோதும் (2)
12. சமையற்காரர் ஆங்கிலத்தில் (2)

மேலிருந்து கீழ் :

1. உலோகங்களில் ஒன்று; பாத்திரங்கள் செய்யப் பயன்படுகிறது (4)
2. நாரதர் இந்தச் செயலுக்குப் பெயர் பெற்றவர் (4)
3. அரிசியுடன் இதைச் சேர்த்தால்தான் இட்லி கிடைக்கும் (4)
7. சுமை (3)



11. பல காய்கள் சேர்ந்த கூட்டு (4)

கீழிருந்து மேல் :

4. ________, தருமம் செய்வது நல்லது (3)
14. காரத்தன்மையுடைய காய் (4)
15. பளபளப்பாக்கு (4)
16. ________ சிறுத்தாலும் காரம் குறையாது (3)

- இ. நந்தினி,
ஆறாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி

விடை 82ஆம் பக்கம்

பிரபாகரன், கிருபாகரன், கமலாகரன் மூவரும் இணை பிரியாத நண்பர்கள். ஆனால் ஏழைகள். யாருக்கு எந்த நேரத்தில் சரீர உதவி தேவைப்பட்டாலும் தாமதியாமல் சென்று உதவுவர். எது கிடைத்தாலும் பகிர்ந்து உண்டனர்.


ஒருநாள் நகரத்துக்குப் போவதென்று முடிவெடுத்துப் புறப்பட்டனர்.

நள்ளிரவு. ஒரு பெரிய மரத்தடியில் தங்கினர். அருகில் ஆறு ஓடிக் கொண்டிருந்தது.

''கிருபா! காட்டிலே கொடிய மிருகங்கள் சஞ்சரிக்கும். அதனாலே சுள்ளிகளைப் போட்டு தீ மூட்டி ஒருவர் காவல் இருக்க இருவர் உறங்குவோம். காவல் இருப்பவனுக்குத் தூக்கம் வரும் போது அவன் உறங்குபவரில் ஒருவரை எழுப்பட்டும்.''


கமலாகரன் குளிர் காய்ந்து கொண்டிருக்கையில் ஒரு மான்

வேகமாக வளர்ந்த உதடுகள்!



நொண்டிக் கொண்டே வந்தது. கமலாகரன் அதன் பாதத்தை ஆராய ஒரு முள் குத்திக் கொண்டிருப்பதைக் கண்டான். அதைப் பிடுங்கி அதன் காயம் ஆற, பச்சிலையை வைத்துக் கட்டினான்.

அப்போது ஒரு தேவதை வந்து கங்கணத்தை நீட்டி, ''கருணையுள்ளவனே! நான் இங்குள்ள வனதேவதை. இந்தப் பரிசைப் பெற்றுக் கொள். என்னை நினைத்தால்



நீ விரும்பும் பொருள் உனக்குக் கிடைக்கும். இன்று போல் இரக்க முள்ளவனாக என்றும் இரு'' என வாழ்த்தி மறைந்தது.

கமலாகரனுக்கு சந்தோஷம் சொல்லி மாளாது. பிரபாகரனை எழுப்பி நடந்ததைக் கூறி கங் கணத்தைக் காண்பித்தான்.

''சரி, நீ தூங்கு'' என்றபடி பிர பாகரன் காவல் காத்தான். பிர பாகரன் அங்கே வாடியிருந்த செடி கொடிகளுக்குச் சுற்றி வரப் பள்ளம் கட்டி அங்கிருந்த மூளிப் பானை யால் தண்ணீர் ஊற்றினான்.

இப்போதும் வன தேவதை வந்தது.

''காட்டிலுள்ள செடி தானே என்று அலட்சியம் காட்டாமல் நீர்

மாலதி

வார்க்கும் இளகிய மனம் கொண்டவனே! இந்தப் பரிசைப் பெற்றுக் கொள்'' என்று ஒரு புல்லாங் குழலை நீட்டியது.

''இளைஞனே! இதன் இசைக்கு மயங்காதவரே இருக்க மாட்டார்கள். நீ உதட்டில் வைத்தாலே போதும்'' எனக் கூறி மறைந்தது.

அடுத்து கிருபாகரன் விழித்தான். சற்று நேரத்தில் பாம்பு ஒரு தவளையைக் குறி வைத்துச் செல்வதைக் கண்டான் கிருபாகரன். வேகமாகச் சென்று தவளையை மண்ணோடு ஆற்றில் வீசினான். ஒரு மரக் கிளையை ஒடித்து மண் தரையில் தட்ட பாம்பு ஓடி மறைந்தது.

இப்போதும் வனதேவதை வந்தது. ''கொடிய நாகத்தையும் கொல்ல மனமின்றி விரட்டிய கொடையாளியே! இந்தப் பொற்பையைப் பெற்றுக் கொள். இது அள்ள அள்ளக் குறையாது. தரும குணத்தைக் கைவிட்டால் இது சுரக்காது. இன்று போல் மூவரும் கூடி வாழுங்கள்'' என வாழ்த்தி மறைந்தது.

மகிழ்ச்சி தாளாமல் சிநேகிதர்களை எழுப்பிய கிருபாகரன் நடந்ததைச் சொன்னான். அதற்குள் விடிய ஆரம்பித்தது. மூவரும் வழிப்பயணத்தைத் தொடர்ந்தனர்.

நகர எல்லையில் ஒரு வீடு வாங்கிக் கொண்டு சௌகர்யமாக வாழ்ந்தனர். தினமும் அன்ன தானம் நடத்தி, இசை மழை பொழிந்து அனைவரையும் மகிழ்வித்த அவர்களை, அழைத்து வரும்படி தளபதியை அனுப்பினான் வேந்தன்.

அரசன் அவர்களை வரவேற்று புல்லாங்குழல் இசையைக் கேட்டான்.

அரண்மனையில் சிறிது நாள் விருந்தினராகத் தங்கும்படி கேட்டுக் கொண்டான். மூவரும் சம்மதித்தனர்.

அரசகுமாரன் புவனேந்திரன் சோம்பேறி. தந்தை அம்மூவரையும் புகழ்வதைக் கண்டு பொறாமை கொண்டான். அவர்களிடம் நட்புக் கொண்டான்.

ஒருநாள் அவர்கள் தூங்கும் போது மூன்று அதிசயப் பொருட்களையும் களவாடி மறைத்து வைத்தான். அரசன் அரண்மனை முழுவதும் தேட உத்தரவிட்டான். இளவரசன் அறையைச் சோதனை செய்ய யாருக்கு தைரியம் வரும்? மூவரும் வருத்தமாக அரசனிடம் விடை பெற்று வீட்டுக்குச் சென்று வன தேவதையைத் தியானித்தனர்.

வன தேவதை தோன்றி,

யார் அந்தப் பிரபலம்?




தொடக்கத்தில் வாகன ஓட்டியாக பணியாற்றியிருக்கிறார்.

''இந்த மாம்பழக் கூடையை இளவரசனுக்குப் பரிசளியுங்கள். இதில் ஒரு மாம்பழம் தங்க நிறத்தில் பளபளப்பாக இருக்கும். அது பொல்லாதவர்களுக்குப் பாடம் கற்பிக்கும்'' என்று கூறி மறைந்தது.

பழக்கூடையோடு அரண்மனைக்குச் சென்று புவனேந்திரனிடம் கொடுத்தனர்.

''இளவரசே! தாங்கள் அன்போடு பழகினீர்கள்! அதற்காக இப்பழங்களைப் பரிசளிக்கிறோம். அதிலும் இந்தத் தங்க நிறப்பழம் கிழத்தன்மை வராது தடுக்கும்; நீண்ட நாள் புகழோடு வாழ வைக்கும்'' என அளந்தனர்.



''டிரைவர்-கண்டக்டருக்குள்ள ஏதோ தகராறுடா!''
''என்னாச்சு?''
''கண்டக்டர் 'ரைட்'ங்கிறார், பஸ் 'லெஃப்ட்'ல திரும்புதே!''

- எஸ்.ஏ.கனி

இளவரசன் ஆசையோடு எடுத்துக் கடித்தான். அவனது இரு உதடுகளும் வீங்கிக் கொண்டே போயின. பாதிப்பழம் சாப்பிடுவதற்குள் மேல் உதடு வயிறுவரை வளர்ந்து தொங்கியது. கீழ் உதடோ தரையைத் தொட்டது. மாம்பழத்தை வீசி எறிந்தான்.

மூவரும் மெதுவாக அங்கிருந்து நழுவினர்.

அரசர் வந்து பார்த்து சோகமானார். வைத்தியம், மாந்திரீகம் எதற்கும் வளர்ச்சி கட்டுப்படுவதாயில்லை. கத்தியால் அறுத்துப் பார்த்தனர். இளவரசன் போட்ட கூச்சல் கர்ண கடூரமாயிருந்ததோடு கத்தியும் உடைந்தது.

அப்போது வன தேவதை ஒரு துறவி வடிவில் வந்தது. அரசகுமாரனைத் தான் குணமாக்குவதாகக் கூறியது! அரசர் சம்மதித்தார். சோழி குலுக்கிப் போட்டு, ''புவனேந்திரன் எதையோ திருடியிருக்கிறான். எடுத்து வந்து கொடுத்தால் உதடுகள் பழையபடி ஆகும்'' என்றார் துறவி.

இளவரசன் ஓடிப்போய் புல்லாங்குழலை எடுத்து வந்து வைத்தான். உதடுகளின் நீளம் மூன்றில் ஒரு பாகம் குறைந்தது.

''ம், இன்னும் இருக்கிறது'' என்று துறவி சொல்ல கங்கணத்தையும் பொற்பையையும் கொண்டு வந்தான். உதடு 'மளமள'வென்று சுருங்கி பழைய நிலைக்கு வந்தது.

அரசன் தன் மகனைக் கண்டித்தார். துறவிக்குப் பரிசளித்தனுப்பினார். வன தேவதை அபூர்வப் பொருட்களையும் பரிசையும் மூன்று நண்பர்களிடம் ஒப்படைத்தது.

நெட்பிட்ஸ்

தாய்லாந்து வனத்துறையினர் அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக் கழக பேராசிரியர் ஒருவரது உதவியுடன் யானைகளை வைத்தே ஓர் இசைக் குழுவை உருவாக்கிவிட்டனர். பெயர் 'தாய்லாந்து யானைகள் இசைக்குழு'.



யானைகள் வழங்கும் இசை நிகழ்ச்சியைக் காண மக்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். இதன் மூலமாக திரட்டப்படும் நிதி, யானைகள் நலனுக்காகவே பயன்படுத்தப்படுகிறது என்பது கூடுதலான ஒரு தகவல்.

இங்கே நான்கு இளம் பெண்கள் கையில் இருக்கும் வயலின், இசைக் கருவிகளைப் பாருங்கள். அவை கண்ணாடியினால் செய்யப்பட்டவை. இவற்றை வடிவமைத்தவர் ஜப்பானிய இசைக் கருவிகள் வடிவமைப்பாளரான ஹரியோ. மிக நுணுக்கமான கலை உணர்வுடன் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வயலின்களிலிருந்து, வழக்கமான வயலின்களைப் போலவே இன்னிசை வருகிறது. பார்ப்பவரையும் கேட்பவரையும் இந்தக் கண்ணாடி வயலின்கள் பிரமிக்க வைக்கின்றன.

பழுப்பு நிறத்தில் பாலைவனங்களில் ஒட்டகங்களைப் பார்த்திருப்பீர்கள். ஆனால் பாலைவன நகரமான துபாயில், இதுபோன்ற வண்ண எழில் மிகுந்த ஒட்டகங்



களைப் பார்க்க முடியும். ஒவ்வொன்றும் ஆறடி உயரம் உள்ளவை. இதுபோல மொத்தம் எண்பது ஒட்டகங்கள் பற்பல வண்ணங்களில் துபாய் நகரமெங்கும் நிறுத்தப்பட இருக்கின்றன. துபாய் வரும் சுற்று

விமானத்தில் பயணித்த சிலந்தி!



லாப் பயணிகள் ரசிக்க புதுமை யாக ஏதாவது செய்ய வேண்டும்



என்பதே இந்த ஒட்டகங்கள் நிறுத்தப்படுவதன் நோக்கம்.

கொரியா நாட்டு அதி நவீன அறிவியல் தொழில் நுட்ப மையம் வடிவமைத்த ரோபோ மனிதன்தான், இங்கே படத்தில் குழந்தைகளோடு நடனமாடு கிறான். இந்த ரோபோ மனி தனின் உயரம் 125 செ.மீ, எடை 55 கி.கி. நடன அசைவு கள் மட்டுமில்லாமல், உள்ளே

புரோகிராம் செய்யப்பட்டிருப் பதால், சிறுவர் களுடன் சரிக்கு சரியாய் நின்று கொண்டு, சில விளையாட்டு களும் இவனால்




விளையாட முடிகிறது.

படத்தில் உள்ளது சாதாரண

சிலந்தி இல்லை. இருபத்து ஐந்து செ.மீ. அளவுக்கு வளரக் கூடிய ராட்சச சிலந்தி. இது கடித்தால், பயங்கரமாக வலி இருக்கும். உடனடியாக உடல் வியர்க்க ஆரம்பித்துவிடும். சமீபத்தில் இப்படி ஒரு ராட்சச சிலந்தி, விமானத்தில் ஒளிந்து, (ஆஸ்திரேலியா) மெல்போர்ன் நகரத்துக்கு வந்துவிட்டது. விலங்கியல் நிபுணர்களின் உதவியோடு, சிலந்தியைப் பிடித்து, பூச்சிகள் மியூசியத்தில் வைத்துவிட்டார்கள்!

ஒருநாள், கருமியின் நண்பன், கருமியின் சொத்துகளைப் பார்க்க விரும்பினான். பெரும் தயக்கத்துடன் கருமி, பணப் பெட்டகத்தை நண்பனுக்குக் காட்டினான். சிறிதுநேரம் பெட்டகத்தினுள் இருந்த விலை மதிப்பற்றவற்றைப் பார்த்துக் கொண்டே இருந்த நண்பன், ''அப்பாடா! நானும் உன்னைப் போலவே பெரும் பணக்காரன் ஆகிவிட்டேன்!'' என்றான்.

கருமிக்கு ஒன்றும் புரியவில்லை.



''கொட்டும் முரசு'ன்னு சொன்னா உடனே பையன் ஏன் இப்படி மிரள்றான்?''

''நேத்துத்தான் இவனை ஒரு தேள் கொட்டுச்சு. ஒரு வேளை முரசும் 'கொட்டிடுமோ'ன்னு மிரள்றான் போல!''

- அனுராதா ராஜப்பா

கடைசியாக ஒரு குட்டிக் கதை

ஒரு கருமி இருந்தான். அவனிடம் ஏராளமான சொத்துகள் இருந்தாலும் ஒரு பைசா செலவு செய்யமாட்டான். ஆனால் தினமும் தன் பணப் பெட்டகத்தைத் திறந்து, அதிலிருக்கும் பணம், தங்கம், வைரம் அனைத்தையும் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு, மறுபடி மூடி வைத்துவிடுவான்.

நண்பன் சொன்னான், ''உன்னிடம் எவ்வளவு பணம் இருந்தும் என்ன பயன்? இவற்றை அனுபவிக்காமல், வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கிறாய்! அவ்வளவுதானே! நானும் அந்தப் பணத்தைப் பார்த்துவிட்டேன் இன்றைக்கு! ஆக, நானும் உன்னைப் போலவே பணக்காரன்தானே?'' என்றதும், கருமி வாயடைத்துப் போனான்!

தொகுப்பு: எஸ்.சந்திரமௌலி



கோகுலம் சந்தா செலுத்துங்கள்; கதை கேளுங்கள்!

எப்படி பெறலாம்?

* புதிதாக சந்தா செலுத்தலாம் ☐ * ஏற்கெனவே உள்ள சந்தாவை மேலும் ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கலாம் ☐ * உங்கள் நண்பருக்குப் பரிசாக சந்தா கட்டி நீங்கள் காஸெட் பெறலாம். ☐

பெயர்: .... நண்பரின் பெயர்: ....

முகவரி: .... முகவரி: ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 72/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக சேர்த்து அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

இங்கு 5 கேள்விகளும் 6 படங்கள் மற்றும் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான விடைகளைத் தேடிக் கண்டுபிடித்து எழுதுங்கள். பெற்றோர் கையொப்பம் அவசியம். முகவரி கூப்பனை ஒட்டி உங்கள் முழு முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள். மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக் குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி : 20.05.2005

1000/- ரூபாய் பரிசுப் போட்டி


I. பதில் என்ன?



1. லெனினின் முழுப் பெயர் என்ன?
2. லெனினின் சகோதரர் பெயர்?
3. 1917ஆம் ஆண்டு முதன் முதலில் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை அமைத்தார். அது எந்த நாட்டில்?
4. லெனின் சட்டம் பயின்றவர். சரியா?
5. எந்த வயதில் இறந்தார்?

II. விலங்குகளின் பெயர்களைச் சரியாக எழுதுங்கள்.













ரக்கூன், யாக்,
ஆன்டிலோப், ஸீல்,
ராட்சத எறும்புத்தின்னி,
பிளாட்டிபஸ்




ஆசிரியர்,
கோகுலம்
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032


தெரிந்ததும் தெரியாததும்


ஒரு தீவில் 886 தலைகள்!

ஆழி



இந்தத் தீவின் கடற்கரை ஓரமாக, ஒவ்வொன்றும் 15 டன்கள் எடையுள்ள, கருங்கல்லால் ஆன, ஒரே மாதிரியான 886 பிரம்மாண்டமான சிலைகள் (தலைமட்டும்) இருக்கின்றன! ஆனால், இவற்றையெல்லாம் யார் செதுக்கிவைத்தார்கள் என்பது ஒருவருக்கும் தெரியாது!






ஈஸ்டர் தீவு என்பது தென் பசிபிக் சமுத்திரத்தின் நடுவில் இருக்கிறது. இதன் பரப்பளவு 64 சதுர மைல்கள் தாம்! ஓர் எரிமலை குளிர்ந்து நிலப்பரப்பாக ஆனதுதான் இந்தத் தீவு!

இதற்கு ஏன் 'ஈஸ்டர் தீவு' என்று பெயர் வந்தது? 1722-ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிற்றுக் கிழமை அன்று டச்சு அட்மிரல் 'ஜாகோப் ரோஜ் ஜெவீன்' என்பவர் இந்தத் தீவைக் கண்டுபிடித்தார். அதனால்தான் இந்தப் பெயர் வைக்கப்பட்டது.

கி.பி.400 க்கு முன் யாரும் இந்தத் தீவில் வசிக்க விரும்ப வில்லை.



பிறகு, 'ஹோட்டு மாட்டு-ஏ' என்னும் ஆதிவாசித் தலைவன், இரண்டு படகுகளில் ஆட்களையும், சில தானிய வகைகளையும், கோழி இனங்களையும் ஏற்றிக்கொண்டு இந்தத் தீவுக்குப் போனான்.




இங்கே உள்ள சிலைகளை 'மோய்' என்று குறிப்பிடுகிறார்கள். இந்தச் சிலைகளைக் கடவுளின் தூதர்களாக எண்ணிச் செதுக்கியிருக்கலாம் என்று கருதுகிறார்கள்.



இன்று இந்தத் தீவில் எந்த நிலவிலங்கும் வசிக்கவில்லை. ஆனால் 30 விதமான சிறு தாவரங்கள் மட்டுமே வளர்ந்திருக்கின்றன.

இங்கே இருந்த ஆதிவாசிகள், மனிதர்களைக் கொன்று நரமாமிசம் தின்பவர்களாக இருந்தார்கள்! இப்போது அப்படி அல்ல! இந்தத் தீவு வாசிகள் 'பாலினேஷிய'னும் தென் அமெரிக்கச் செவ்விந்தியர்களும் கலந்த இனம்.





இவர்களுடைய உணவு டுனா மீன், மஞ்சள் வால் மீன் ஆகியவை மட்டுமே!

தேன் சிட்டு



ஊசி மூக்கு ராணியார்
உயர உயரப் பறக்கிறார்!
'கீச்சு கீச்சு' வென்றேதான்
கிட்ட வந்து கத்தறார்!

குட்டை நெட்டைப் பூக்களில்
குனிந்து குனிந்து பார்க்கிறார்!
வட்டமிட்டுத் தேடியே
வண்ணச் சிறகு விரிக்கிறார்!

வாசமுள்ள பூக்களை
வளைய வளைய வருகிறார்!
காசில்லாமல் தேனதை
காலம் முழுதும் குடிக்கிறார்!

– திலீபன்



சென்ற வருடம் நடந்த +2 பொதுத் தேர்வில் ராம்குமார் எடுத்த மதிப்பெண்கள் 1200க்கு 1148. கணிதத்தில் 200 மற்றும் சமஸ்கிருதத்தில் 199 எடுத்து இரு பாடங்களிலும் ஸ்டேட் ரேங்கும் வாங்கினார். கைநிறைய இத்தனை மார்க்குகளை அள்ளிய ராம்குமாருக்கு பத்து வயதிலிருந்தே இரு கண்களின் பார்வையும் பறிபோய் விட்டது. பார்வை பறிபோனாலென்ன, நம்பிக்கை இருக்கும் வரை இவ்வுலகம் நம் காலடியில் தானே! தன் வயதையொத்த இளைஞர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கும் ராம்குமார் தற்பொழுது விவேகானந்தா கல்லூரியில் பி.காம் முதலாமாண்டு படிக்கிறார்.

நம்பிக்கையின் மறுபெயர் ராம்குமார்!

ஹாய், ராம்குமார் எப்படி இந்தச் சாதனை சாத்தியமாச்சு?

கண் பார்வை பறிபோனாலும் நான் எல்லோரும் படிக்கும் ஸ்கூலில்தான் படிச்சேன். ப்ரெய்லி ஸ்கூலுக்கெல்லாம்





குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 பி	ம்	ப	ம்		ம்	2 க	ல	3 உ
த்			ன			ல		ளு
த		ழ்	4 தா		ளை	5 க		ந்
ளை	6 கி			7 பா		ம்	லா	8 து
			9 க	ர	ம்			
ய்	யூ	10 கு		ம்			லை	11 அ
கா		க்	12 கு		13 கு	றை		வி
ள		ஞ			டு			ய
14 மி	ன்	15 மி	னி		16 க	ம்	ம	ல்

போகலை. என் கஸின் ரொம்ப நல்லா படிப்பான். அவனைத் தோற்கடிக்கணும்னு நினைச்சு படிச்சேன். அதுவே ஸ்டேட் ரேங்க் வாங்கற அளவுக்கு என்னை உயர்த்திடுச்சு.

10 வயது வரைக்கும் என் பார்வை நல்லாதான் இருந்தது. ஆனா ஒரு நாள் ஸ்கூல்ல ஏற்பட்ட சம்பவத்துல என் இடது கண் பாதிக்கப்பட்டுச்சு. அதுக்கு ட்ரீட்மெண்ட் எடுக்கும்போது இடது கண்ணோட பாதிப்பு வலது கண்ணுக்கும் பரவி... அதன் பிறகு என் உலகம் இருட்டாயிடுச்சு.

படிப்பு, தேர்வுகளில் எப்படி உங்களை ஈடுபடுத்திக்கிறீங்க?

க்ளாஸ் ரூம்ல பாடத்தை நல்லா கூர்மையா கேட்டுப்பேன். வீட்ல அம்மா எனக்காக பாடங்களை கேசட்ல பதிவு செய்து கொடுப்பாங்க. பெற்றோர்களின் அரவணைப்பும் அக்கறையும் இல்லாமல் என்னால் இவ்வளவு தூரம் சாதித்திருக்கவே முடியாது.

+2 பொதுத்தேர்வில் எனக்காக தேர்வு எழுதிய எழுத்தர் வேதவல்லி (ராம்குமார் பதிலைச் சொல்ல இவர் அதை விடைத் தாளில் எழுதியவர்) உடல்நலமின்றி இருந்த போதிலும் எனக்காக கஷ்டப்பட்டு தேர்வு எழுதினார். நான் படித்த ஸ்ரீ சீதாராம் வித்யாலயா பள்ளியின் பதினோராம் வகுப்பு டீச்சர் லஷ்மி அவர்கள் காண்பித்த கூடுதல் அக்கறை... இவர்களில்லாமல் என்னால் வாழ்க்கையில் ஓர் அடி கூட எடுத்து வைத்திருக்க முடியாது. என் கண்ணுக்கு கண்ணாக இருந்தார்கள் இம்மூவரும்.

கனவுகள்...?

பெரிய ஆடிட்டராகணும்... பாடப் புத்தகங்களில் உள்ள கணக்குகளைத் தவிர்த்து நானே சொந்தமாகப் பல புதிய கணித ஃபார்முலாக்கள் உருவாக்கியுள்ளேன். கணிதத்தில் உள்ள ஈடுபாட்டைத் தவிர இசையிலும் அதீத ஆர்வம் இருக்கு. கீபோர்டு வழியாக நிறைய ட்யூன்கள் கம்போஸ் செய்துள்ளேன். ஆல்பம் ஒன்றை உருவாக்கவும் ஆசை.

இப்படி திறமைகள், கனவுகள் வழியாக தினம்தினம் புது உலகைக் கண்டு வருகிறார் ராம்குமார். நாளைய இந்தியா என்பது ராம்குமார் மாதிரியான உறுதியான இளைஞர்கள் கையில்தான் உள்ளது.

- ச.ந.கண்ணன்

படம்: **ராஜன்**



மாமி போட்ட பந்தல், மறுபடி பிரித்தால் கந்தல்!

I

1. அரிசிப் பல் முப்பத்திரண்டு, கடவாய்ப்பல் முப்பத்திரண்டு இருந்தும் யாரையும் கடித்ததில்லை - யார் அது?

2. சாப்பிடும்வரை தொல்லை பண்ணும்; சாப்பிட்ட உடன் மறைந்து போகும் - அது என்ன?

3. மஞ்சள் நிறக் கூடாரத்துள்ளே, சிகப்பு நிற மெத்தையிலே, வெள்ளை நிறப் பிள்ளைகள் தனித்தனியாக உறங்கும்! - அது என்ன?

- ஜோதி,
ஸ்ரீ பெரும்புதூர்

II

1. நோயில்லை, நொடியில்லை ஒவ்வொரு நிமிடமும் மெலிகிறான் - அவன் யார்?

2. மாமி போட்ட பந்தல், மறுபடியும் பிரிச்சா கந்தல் - அது என்ன?

3. காட்டில் தொங்கும் பொட்டலம், காவல் நிறைந்த பொட்டலம் - அது என்ன?

- ஒய்.யூனுஸ் சாரிக்,
மதுரை

III

1. ஒரு கூட்டுக்குள்ளே இரண்டு பறவைகள் - அவை என்ன?

2. வெள் எருக்கன் பூத்திருக்க, வெகு பேர் காத்திருக்க - அது என்ன?

3. பச்சை பச்சை என்றிருக்கும் பாகற்காயும் அல்ல; பக்கமெல்லாம் முள் இருக்கும் பலாக்காயும் அல்ல; உள்ளே வெளுத்திருக்கும் தேங்காயும் அல்ல; உருக்கினால் நெய் வரும் - வெண்ணெயும் அல்ல - அது என்ன?

- கி.நிவேதிதா,
ஆறாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி

விடைகள்:

I 1. சீப்பு 2. பசி 3. கொய்யாப் பழம் - கொய்யா விதைகள்

II 1. மெழுகுவர்த்தி 2. சிலந்தி வலை 3. தேன்கூடு


III 1. முட்டை 2. சாதம் 3. முத்துக்கொட்டை


நகரும் பனிமலை!

அண்டார்டிக் பகுதியில் உள்ள உலகின் மிகப் பெரிய பனிமலை - பி15ஏ நகரத் தொடங்கியிருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்து உள்ளனர். இந்தப் பனி மலையின் நீளம் 160கி.மீ. இந்தப் பனிமலையைக் கொண்டு நைல் நதியில் 80 ஆண்டுகளுக்குத் தண்ணீர் விநியோகிக்க முடியும். பனிமலையினால் நீரோட்டமும் காற்றின் ஓட்டமும் தடுக்கப்படுகிறது. அங்கு ஆராய்ச்சி மேற்கொள்பவர்களுக்கும் பெங்குவின்களுக்கும் இடையூறாக இருக்கிறது. நகரும் தன்மையுள்ள இந்தப் பனிமலை இப்போது மீண்டும் நகர ஆரம்பித்து விட்டதாக விஞ்ஞானிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

காப்புரிமை ரத்து

இந்தியாவின் பாரம்பரியச் செல்வம் வேம்பு. அதன் பயனை பல்லாயிரம் ஆண்டுகளாக அறிந்து, பயன்படுத்தியும் வந்திருக்கிறோம். இந்த வேம்புக்கான காப்புரிமையை அமெரிக்கா 1994ஆம் ஆண்டு பெற்றது. இதனை எதிர்த்து ஐரோப்பாவைச் சேர்ந்த பசுமை நிறுவனம் மற்றும் இந்தியச் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் தொடர்ந்து போராடி வந்தனர். அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய காப்புரிமை அமைப்பு அமெரிக்காவுக்கு வழங்கிய காப்புரிமையை ரத்து செய்துள்ளது.





விற்பனையில் சாதனை!

அமெரிக்காவில் அதிகம் விற்பனையாகி சாதனை படைத்துள்ளது ஹாரிபாட்டர் அண்ட் தி ஆர்டர் ஆப் தி பீனிக்ஸ் நாவல். 2003ஆம் ஆண்டு ஜூனில் வெளி வந்த இந்த நாவல் 24 மணி நேரத்தில் 50 லட்சம் பிரதிகள் விற்றது. தற்போது இந்தப் புத்தகம் ஐந்தாவது பதிப்பாக 68 லட்சம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பனிப் பிரதேசம்


ஏப்ரல் இதழில் பனிப்பிரதேசம் என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள் இங்கே...



முதல் பரிசு: கே. நிவேதா,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி



இரண்டாம் பரிசு:
சி. நவீன் கோபிநாத்
ஏழாம் வகுப்பு,
போப் நினைவு மே.நி. பள்ளி,
சௌரிப்பாளையம்.



மூன்றாம் பரிசு: இரா. சுகுணா,
ஆறாம் வகுப்பு,
டதி பெண்கள் மே.நி. பள்ளி,
நாகர்கோவில்



ஆறுதல் பரிசு: கோ. இராகுல் வாசன்,
எட்டாம் வகுப்பு, டி.ஏ.வி. சீனியர்
மே.நி. பள்ளி, சென்னை



ஆறுதல் பரிசு: எம்.ஏ. ராஜாதித்யன்,
ஆறாம் வகுப்பு,
நாகை காயிதே மில்லத்
மெட்ரிக் பள்ளி, தோப்புத்துறை

மனமே நலமா?

சந்தேகத்தை

அன்புள்ள டாக்டருக்கு,

அம்மா கேஸ் ஸ்டவ்வை அணைச்சிருக்காரா? தூங்கும்போது வீட்டை நன்றாகப் பூட்டியிருக்கோமா? என் தங்கை பரீட்சைக்கு ஹால் டிக்கெட் எடுத்துட்டுப் போறாளா? என சந்தேகம் வந்து கொண்டிருக்கிறது. என்ன செய்யலாம் டாக்டர்?

- அரவிந்த் கண்ணா
மதுராந்தகம்

வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியூருக்குச் செல்லும்போது, பேருந்தில் ஏறி உட்கார்ந்ததும் சில சந்தேகங்கள் மனதில் ஓடும். வீட்டின் கொல்லைப்புறக் கதவைப் பூட்டினோமா, பீரோவைப் பூட்டினோமா, சமையலறையில் கேஸ் ஸ்டவ்வை அணைத்தோமா, குளியலறையில் வாட்டர் ஹீட்டர் சுவிட்சை அணைத்தோமா... இந்த மாதிரி எண்ணங்கள் எல்லோருக்கும் ஏற்படும். இது இயல்பு. அதே நேரத்தில் ஒருவருக்கு இந்த எண்ணங்கள் அடிக்கடி வந்து அவருடைய தினசரி வேலைகளைப் பாதிக்கும் அளவிற்கு எல்லை மீறுமானால் அப்போது இது ஒரு நோயாகக் கருதப்படும்.

'எண்ணச் சுழற்சி நிர்பந்த நோய்' (OBSESSIVE COMPULSIVE DISORDER) என்று இதற்குப் பெயர். சில எண்ணங்கள் மனதில் மீண்டும் மீண்டும் வந்து ஒரு செயலைத் திரும்பத் திரும்ப செய்யத் தூண்டும். எடுத்துக் காட்டாக, இந்நோயுள்ளவர்கள் கை கழுவுவது, தாளிட்ட கதவைச் சரி பார்ப்பது, புத்தகப் பையில் தேவையான நோட்டுகளை எடுத்து வைத்திருக்கிறோமா என்று சோதிப்பது போன்றவற்றில் இத்தனை முறை என்று கணக்கு வைத்துக் கொண்டு அச் செயலை பல முறை செய்து கொண்டிருப்பார்கள். இது தேவையில்லை எனத் தெரிந்தும் அச்செயலைக் கட்டுப்படுத்த அவர்களால் முடியாது. அப்படி செய்யாவிட்டால் அதை ஒரு குற்றமாகக் கருதுவார்கள். அதனால் தங்களுக்கு ஏதேனும் தீங்கு வந்து விடுமோ எனப் பயப்படும் அளவிற்கு அந்த எண்ணம்



இவர்களை ஆட்டிப்படைக்கும்.

இந்த நோய்க்கு முக்கிய காரணங்கள்: ஐந்து வயதிற்குள் குழந்தைக்கு ஏற்படும் கசப்பான அனுபவம், அதிர்ச்சி தரும் நிகழ்வு, பெற்றோரின் நிர்பந்தங்கள் போன்றவை. சிலருக்குப் பரம்பரை காரணமாகவும் வரக் கூடும். நடைமுறையில் இந்த நோயுள்ளவரின் பெற்றோர் மிகுந்த கண்டிப்பும் எதையும் வற்புறுத்தும் மனப்பான்மையும் கொண்டிருப்பார்கள்.



குழந்தை வளர வளர இப்போக்கு நீடிக்கும்போது எண்ணச் சுழற்சி நிர்பந்த நோய் ஏற்படும்.

உன்னைப் பொறுத்த அளவில் உன் பிரச்னைக்குக் காரணம் என்ன என்று ஆராய்ச்சி செய்வதைவிட இந்தப் பிரச்னையிலிருந்து விடுபடுவது எப்படி

என்ன செய்வது?

என்று பார்ப்பதே புத்திசாலித்தனம். முதலாவதாக நீ எப்போதுமே தனிமையில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். வீட்டிலும் சரி, மற்ற இடங்களிலும் சரி, பலருடன் கலகலப்பாகப் பேசிப் பழகு. இதனால் தேவையற்ற எண்ணங்கள் வருவது குறையும். மனதில் பயம் ஏற்படாது. மனதை ஒருநிலைப்படுத்துவதற்கு தியானம் செய். இதனால் மனவலிமை அதிகரிக்கும். ஆழ்ந்த உறக்கம் வருவதற்கு தினமும் மாலையில் விளையாடு அல்லது உடற்பயிற்சி செய். ஆட்டிப்படைக்கும் எண்ணங்கள் வரும்போது சிறு ஒலி எழுப்பு. எடுத்துக்காட்டாக மேஜையைத் தட்டுவது, புத்தகத்தைப் பட்டென்று மூடுவது போன்ற ஒலிகளால் உன் எண்ண ஓட்டம் தடைபடும்.

இப்படியும் செய்யலாம். ஒரு டைரியில் நீ ஏற்கெனவே செய்துவிட்ட செயலைக் குறித்து வைத்துக் கொள். அதே செயலை மீண்டும் செய்யத் தோன்றாது. இதற்குப் பிறகும் இந்த எண்ணங்கள் உனக்கு ஏற்படுமானால் உளவியல் மருத்துவரிடம் சென்று மருத்துவச் சிகிச்சையும் உளவியல் சிகிச்சையும் பெற்றுக் கொள். சரியாகிவிடும்.

டாக்டர் கு.கணேசன்

விரல் அளவு

கென்டா, மோரி தம்பதியர் ஜப்பானில் வசித்து வந்தனர். இவர்களுக்குக் குழந்தை இல்லை. தாங்கள் தினமும் வணங்கிவரும் சூரியக் கடவுளிடம், 'எங்களுக்கு விரல் அளவு ஒரு குழந்தை இருந்தால்கூட சந்தோஷப்படுவோம்' என வேண்டினர். சில நாட்கள் சென்ற பிறகு அவர்களுக்கு விரல் அளவு குழந்தை பிறந்தது. சன்போஷி எனப் பெயரிட்டு மிக ஆசையோடு அவனை வளர்த்து வந்தனர். இளைஞனான பிறகு சன்போஷி ''என்னை இத்தனைக் காலம் நீங்கள் அன்போடு வளர்த்தீர்கள். நான் மன்னன் கியோடோவிடம் வேலை பார்த்த பிறகு உங்களிடம் திரும்ப வருவேன்'' என்று கூறினான். அவன் தாய் மோரி ஊசி, ஒரு பெரிய மரப் பாத்திரம், இரண்டு குச்சிகள் கொடுத்தனுப்பினாள். மரப் பாத்திரத்தில் உட்கார்ந்து கொண்டு குச்சியால் ஒரு ஆற்றைக் கடந்து சன்போஷி கியோடோ மன்னன் இருப்பிடத்திற்கு வந்தான்.

மன்னன் சபையில் சன்போஷி குரல் எழுப்பினான். மிகச் சிறிய உருவமாகையினால் பல மணி நேரம் கழித்துதான்





சன்போஷி!

மன்னன் இவனை அடையாளம் கண்டு கொண்டான். தன்னை வேலைக்குச் சேர்த்துக் கொள்ளுமாறு சன்போஷி கூற மன்னனும் தன் மகளும் இளவரசியான மோனாவிற்குப் பாதுகாப்பாளனாக அவனை நியமித்தார்.

ஒரு நாள் இளவரசி மோனா, சன்போஷியுடன் நகரத்திற்கு வெளியே உள்ள ஒரு கோவிலுக்குச் சென்றாள். அரண்மனைக்குத் திரும்பிச் செல்லும் வழியில் காட்டை கடக்கும்போது ஒரு கொள்ளைக்காரன் இளவரசி மோனாவைப் பிடித்துக் கொண்டான். விரல் அளவே உள்ள சன்போஷி அவளைக் காப்பாற்ற நினைத்தான். உடனடியாக கொள்ளைக்காரன் மீது ஏறி ஊசியால் குத்த, மிகுந்த வலி ஏற்பட்டதால் அவன் இளவரசியை விட்டு விட்டான்.

மேலும் கொள்ளைக்காரன் தன்னை இப்படி துன்புறுத்தியவன் யாரென யோசிக்கும்போது அவன் சட்டைப் பையில் விரல் இளைஞன் சன்போஷி

இந்திரா

யைப் பார்த்து பயந்து, தான் கொள்ளை அடித்த பொருட்களையும் அப்படியே விட்டு விட்டு ஓடிவிட்டான். இளவரசி மோனா "நீ மிகவும் சிறிய



உடலைக் கொண்டிருந்தாலும் தைரியசாலி. இதோ அந்தக் கொள்ளைக்காரன் விட்டுச் சென்ற சிறியவாள் ஒன்றை நீ வைத்துக் கொள். இந்த வாள் மிகவும் சக்தி வாய்ந்தது. இது கொள்ளைக் கூட்டத்தினரின் மிகப் பெரிய சொத்தாகக் கருதப் படுகிறது. இந்த வாளிடம் நீ என்ன வேண்டிக் கொண்டாலும் உடனடியாக நடக்கும்" என்றாள்.

சன்போஷி உடனடியாக தான் ஓர் உயர்ந்த, அழகான இளைஞனாக வேண்டும் என்று வேண்ட ஒரே நிமிடத்தில் அழகிய இளைஞன் ஆனான். பிறகு இளவரசியோடு அரண்மனைக்குச் செல்ல அங்கு எல்லோருக்கும் இவனைப் பார்த்து ஆச்சர்யம் ஏற்பட்டது. காட்டில் நடந்ததை இளவரசி மன்னனிடம் விவரமாகக் கூறினாள்.

மன்னன் மிகவும் மகிழ்ந்து போனான். தன் பெண்ணை ஆபத்திலிருந்து சிறிய உருவத்திலேயே புத்தி சாதுர்யத்துடன் செயல்பட்டு காப்பாற்றியதோடு, தனக்கு நல்ல உருவமும் சாமர்த்தியமாகப் பெற்றதால் இளவரசியை சன்போஷிக்குக் கல்யாணம் செய்து வைத்தார். சன்போஷி திருமணம் முடிந்ததும் மன்னன் அரண்மனையில் தங்கிவிடாமல் இளவரசியை அழைத்துக் கொண்டு தன் தாய், தந்தையரிடம் சென்றான். இவனுடைய உருவம் மாறியதால் அவர்களுக்கு அடையாளம் தெரியவில்லை. சன்போஷி விவரமாக எல்லாவற்றையும்கூற அவர்கள் தங்களுக்கு இவ்வளவு சந்தோஷம் ஏற்படக் காரணமாக இருந்த சூரியக் கடவுளை வணங்கி, அவருக்கு நன்றி கூறினர்.

புதிர் உலகம் விடைகள்



I. தாத்தா, மாமா, பாப்பா ஒவ்வொருவருக்கும் (வார்த்தையில்) இரு கால்கள் இருப்பதால் நன்கு நடக்கின்றனர்.

பாட்டி, மாமி, அம்மா, அப்பா, அக்கா ஒவ்வொருவருக்கும் (வார்த்தையில்) ஒரே ஒரு கால் மட்டும் இருப்பதால் நொண்டி, நொண்டி நடக்கின்ற னர்.

அண்ணன், தம்பி, தங்கை ஆகியோருக்கு (வார்த்தையில்) கால் இல்லாததால் நடக்காமல் முடங்கிக் கிடக்கின்றனர்.

அத்தைக்கு (வார்த்தையில்) காலுக்குப் பதில் 'தை' இருப்பதால் தை, தை என்று குதித்து நடக்கிறார்.

II. 75 சட்டங்கள்

முதல் வீடு :

75 + 75 = 150 - 80 = 70

இரண்டாம் வீடு :

70 + 70 = 140 - 80 = 60

மூன்றாம் வீடு :

60 + 60 = 120 - 80 = 40

நான்காம் வீடு :

40 + 40 = 80 - 80 = 0

III. உதாரணம்:

65x9=585=5+8+5=18=1+9=9

605x9=5445=5+4+4+5=18=1+8=9

IV.

1.	கோ	லா	ர்				
2	ச	டை	ய	ர்			
3	பெ	ங்	க	ளூ	ர்		
4	ஜ	மீ	பா	ஸ்	ட	ர்	
5	ஸ்	பீ	டா	மீ	ட்	ட	ர்

V. 312 பழங்கள்


VI. 25 முட்டைகள்

ஒரு ரூபாய் எங்கே?

அவர்கள் இருவருமே தவறாகக் கணக்கிட்டதன் விளைவாக ஒரு ரூபாயை இழந்தார்கள்.

ஐந்து பழம் ஒரு ரூபாய் + நான்கு பழம் ஒரு ரூபாய். ஒன்பது பழம் இரண்டு ரூபாய் என்று விற்றதால் 4½ பழம் ஒரு ரூபாய் என்று கணக்காகிறது. ஐந்து பழம் எண்ணிக்கை அதிகமானால் லாபமும், நான்கு பழம் எண்ணிக்கை அதிகமானால் இழப்பும் ஏற்படும்.

இவர்தான் அந்தப் பிரபலம்!



தொகுப்பு: ஜி.எஸ்.எஸ்

எர்னெஸ்ட் ஹெமிங்வே



• சேவாக்

விளையாட்டு அரங்கம்


கிரிக்கெட்டில் இந்தியாவும் பாகிஸ்தானும் மோதுகிறதென்றால் இந்திய, பாகிஸ்தான் ரசிகர்கள் மட்டுமின்றி உலக ரசிகர்களும் மிகவும் ஆவலுடன் விளையாட்டைப் பார்க்கின்றனர். நீண்ட இடைவேளைக்குப் பின் இரண்டு அணிகளுக்கும் இடையில் 3 டெஸ்ட் மற்றும் 6 ஒரு தினப் போட்டிகள் நடைபெற்றன.

மொகாலியில் மிகுந்த எதிர்பார்ப்புக்கிடையில் முதல் டெஸ்ட் ஆரம்பித்தது. இந்தப் போட்டியில் வீரேந்தர் சேவாக் 173 ரன்களைக் குவித்து இந்தியாவின் ஸ்கோரை உயர்த்தினார். சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட சச்சின் டெண்டுல்கர் 94 ரன்களில் அவுட்டாகி ரசிகர்களை ஏமாற்றினார். பாலாஜி சிறப்பாக பந்து வீசி 3 விக்கெட்களைக் கைப்பற்றினார். பாகிஸ்தான் அணியும் இந்திய அணிக்கு ஈடு கொடுத்து ஆடி தோல்வியைத் தவிர்த்து, டெஸ்டை டிராவுக்கு கொண்டு சென்றது.

கோல்கத்தாவில் இரண்டாவது டெஸ்ட் போட்டி. சொந்த மண்ணில் டெஸ்ட் தொடரைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஆர்வத்துடன் களத்தில் இறங்கியது இந்திய அணி. இந்தப் போட்டியில் ராகுல் திராவிட் இரண்டு இன்னிங்ஸிலும் சதம் அடித்தார். அவரே ஆட்ட நாயகன் விருதும் பெற்றார். அனில் கும்ப்ளே 63 ரன்களைக் கொடுத்து 7 விக்கெட்களை வீழ்த்தி இந்திய அணியை வெற்றியின் பாதைக்கு அழைத்துச் சென்றார். இந்தப் போட்டியில் மொத்தம் 10 விக்கெட்களை வீழ்த்தினார் கும்ப்ளே. பாகிஸ்தான் அணியிலும் யூனிஸ்கான் 108 ரன்களும் யுஹானா 101 ரன்களும் எடுத்தனர். இருந்தும் பாகிஸ்தான் அணி 195 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியாவிடம் தோற்றுப் போனது.

சாதனைகள்!

இந்திய அணி 1-0 என்ற கணக்கில் மூன்றாவது




• பாலாஜி



• ஹர்பஜன்



• இன்சமாம்



• யூனிஸ்கான்



• கும்ப்ளே



• திராவிட்

போட்டியை பெங்களூரில் எதிர் கொண்டது. முதலில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி நன்றாக விளையாடியது. அந்த அணியின் கேப்டன் இன்சமாம் 184 ரன்களை

றைந்த தொடர்!

எடுத்தார். யூனிஸ்கான் 267 ரன் களைக் குவித்தார். இந்தியாவில் வெளிநாட்டு வீரர் எடுத்த அதிக பட்ச ஸ்கோர் என்ற சிறப்பைப் பெற்றார் யூனிஸ்கான். பாகிஸ்தான் அணி முதல் முறையாக இந்திய அணியை எதிர்த்து 500க்கும் அதிகமான ரன்களைப் பெற்றது.

ஹர்பஜன் சிங் 16வது முறை யாக 5 விக்கெட்களை வீழ்த்தி னார். பின்னர் களமிறங்கிய இந்திய அணியில் சேவாக் இரட்டைச் சதம் அடித்தார். இறுதியில் 168 ரன்கள் வித்தியாசத்தில் பாகிஸ் தான் இந்தியாவைத் தோற்கடித் தது. இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வென்றதால் டெஸ்ட் தொடர் டிரா ஆனது.

பெங்களூர் டெஸ்டின் இரண்டாவது இன்னிங்ஸில் 4 ரன்களை எட்டியபோது 10,123 ரன்களை எடுத்து சாதனை படைத்தார் சச்சின் டெண்டுல்கர்.



• சச்சின்

இதன் மூலம் டெஸ்ட் கிரிக் கெட்டில் அதிக ரன்களைக் குவித்த இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றார் சச்சின். சுனில் கவாஸ்கர் 10,122 ரன் களைச் சேர்த்ததே இந்திய வீரர் ஒருவரின் அதிக பட்ச சாதனை யாக இருந்தது. 123வது டெஸ்ட் போட்டியில் இச்சாதனையை முறியடித்துள்ள சச்சின் உலக அளவில் 5வது இடத்திலிருக் கிறார்.

அன்புடன்...



பிரமாதமான தீவு!

எக்ஸ்பிரஸ் ரயில் வேகத்தில், சுவாரசியம் சிறிதும் குறையாமல் வந்து கொண்டிருந்தது 'புதையல் தீவு'. பாலு மற்றும் நண்பர்களுடன் நாங்களும் கடற்கரையில் நடந்தோம்; இருட்டில் வாழ்ந்தோம்; கடலுக்குள் மூழ்கினோம்; காப்பாற்றப் பட்டோம்; பரிசும் வாங்கினோம்! அவ்வளவு தூரம் கதையில் ஒன்றிப் போனோம்!

- கே.கற்பக ஸ்ருதி,
பத்தாம் வகுப்பு,
அ.மே.நி.பள்ளி, ஈரோடு

பாலுவின் துணிச்சல், டில்லியின் அனுபவம், குடுமியின் நகைச்சுவை, ஓவியரின் படங்கள் என புதையல் தீவு பிரமாதமான தீவு ஆகிவிட்டது.

- என்.ராஜசேகர்,
புதுக்கோட்டை

மோகனாவின் கட்டுரையில் ஆப்ரிக்கா தோன்றிய விதம், அங்குள்ள கனிம வளங்கள், மக்களின் வாழ்க்கை முறைகள் போன்றவற்றை வெகு எளிதாக அறிய முடிந்தது.


- சு.ஸ்ரீகாந்த்,
நெய்வேலி

கவர் ஸ்டோரியில் வெளியான 'அனிமேஷன் படங்கள் உருவாவது எப்படி?' என்ற கட்டுரை நன்றாக இருந்தது. கோகுலத்தில் வெளிவரும் போஸ்டர்கள் அனைத்தும் வீட்டின் சுவர்களை அழகுபடுத்துகின்றன. 'யார் அந்தப் பிரபலம்?' மிகவும் சிந்திக்க வைக்கிறது.

- பெ. கோபிசிவராமன்,
கீழ்க்கொடுங்காலூர்

கோடை வெய்யிலின் தாக்கத்திலிருந்து நம்மை தற்காத்துக் கொள்ளும் வழிமுறைகளைப் பற்றி ஆசிரியர் தனது தலையங்கத்தின் வாயிலாக நேசமுடன் சொன்ன வார்த்தைகள் ஒவ்வொன்றுமே தாயன்புக்கு ஈடாக இருந்தன. மெனி...மெனி...தாங்க்ஸ்.

- எஸ்.கே.ஸ்ரீவித்யா,
நெய்வேலி



மாணிக்கத் தீவு

தமிழக வரலாறு,
முத்தமிழ்ச் செல்வன்,

பக் 368, ரூபாய் எண்பது, இராமநாதன் பதிப்பகம், மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, சென்னை - 600 017.

மிகவும் சுருக்கமாக தமிழ் நாட்டின் வரலாற்றை முக்கிய அரச பரம்பரைகள் ஒன்றையும் விட்டு விடாது மன்னர்களின் சாதனைகளைப் படிப்பதற்கு அலுப்புத் தட்டாமல் தந்துள்ள முயற்சி பாராட்டப்பட வேண்டிய தாகும்.

மாணிக்கத் தீவு,
டாக்டர் பூவண்ணன்,

ரூபாய் நாற்பது, சாதனா பதிப்பகம், 24ஏ, டாக்டர் அம்பேத்கார் சாலை, வேலாண்டிப்பாளையம், கோவை -2.

ஐம்பத்தைந்து ஆண்டு களுக்கும் மேலாகக் குழந்தை இலக்கியத்திற்குத் தொடர்ந்து தொண்டாற்றிவரும் ஆசிரியரின் நாவல் படைப்பு இது. மாணிக் கத் தீவில் உள்ள மக்களைக் கொத்தடிமைகளாக வைத்திருக் கும் மந்திர சக்தி மிக்க நான்கு அரக்கர்களையும் தனது அறிவுத் திறத்தால் அழித்து தீவு மக்களுக்கு நல்வாழ்வு தரு கிறான் சிறுவன் மாணிக்கம். அரக்கர்களின் மந்திரசக்தியும் அதை அழிக்க உயிரைப் பணயம் வைத்து மாணிக்கம் தீட்டும் திட்டங்களும் அதன் விளைவாக அவன் அடுக்கடுக்காக ஆபத்து களில் சிக்கி மீள்வதும் நாவலுக்கு வேகத்தை அளிக் கிறது. தரமான தயாரிப்பு. படங் கள் பேசுகின்றன.

சுட்டிக் குழந்தைகளுக்கு குட்டி க்விஸ்,
மு.அப்பாஸ் மந்திரி,

பக்-140, முப்பத்தாறு ரூபாய், மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

விடுமுறையில் வீண் பொழுது போக்காமல் இருக்க இது அருமையாக உதவும். தரமான தயாரிப்பு.


- ரே

10 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





பூனை எலியை அடைய வழிகாட்டுங்கள்!



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka